வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

20.02.2021 சனிக்கிழமை





# ஜெனிவாவில் இந்திய ஆதரவு கோரி மோடிக்கு இலங்கை அவசர கடிதம்!

## புதிய பிரரேரணை உறுதியானதை அடுத்து துரித நகர்வு

கொழும்பு, பெப்ரவரி, 20

ஜெனிவாவில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாக வுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட் டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளதை இலங்கை குறித்த முதன்மை நாடுகள் நேற்று உறுதிப்படுத்தியுள்ளன. இந்த நிலையில் ஜெனிவாவில் இந்தியாவின் ஆதரவைக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அவசர கடிதம் ஒன்று இலங்கை அரசாங்கத்தினால் நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

02



## ஜெனிவா பிரேரணை குறித்து முதன்மை நாடுகள் அறிக்கை

கொழும்பு, பெப். 20

ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள மனித உரிமை கள் பேரவையின் 46 ஆவது மாநாட்டில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை யின் சில விவரங்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் தலைமையிலான முதன்மை நாடுகள் ஐந்த இணைந்து இந்த பிரேர ணையை முன்வைக்க உள்ளன.

02

## புதிய அரசமைப்பின் பின்னரே மாகாண சபைகளுக்கு தேர்தல்?

கொழும்பு, பெப். 20

மாகாணசபைகளுக்கான தேர்தல் இவ்வருடத்துக்குள் நடைபெறும் என முன்னதாக தகவல்கள் வெளியாகிருந் தாலும், புதிய அரசமைப்பு இயற்றப்பட்ட பின்னர் தேர்தல் நடத்துவது குறித்து அரச உயர் மட்டம் பரீசிலித்துவருகின்றது.

20ஆவது திருத்தச்சட்டம், கிழக்கு முனையம் உட்பட மேலும் சில விடயங்களால் அரசு மீது சிங்கள தேசியவாத அமைப்புகள் கடும் அதிருப்தி யில் உள்ளன. அதுமட்டுமல்ல மாகாணசபை முறைமை அவசியமில்லை எனவும் வலியுறுத்திவருகின்றன.

02

## பேரணியில் பங்கேற்றோர் மீது தராதரம் பாராமல் வழக்குகள்!

கொழும்பு, பெப். 20

பேரணி நடத்த நீதிமன்றத் தடை பெறப்பட்ட இடங்களில் பேரணியில் பங்கேற்றவர்கள் மீது வயது வித்தியாசம், தகுதி வேறுபாடு இன்றி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மக் கள் எழுச்சிப் பேரணி

02

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை ஆராயக் குழு!

கொழும்பு, பெப். 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பாராளுமன் றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு துறைசார் மேற்பார்வை செயற்குழுவின் அறிக்கை ஆகியவற்றின் பரிந்துரைகள் தொர்பாக விரிவாக ஆராய்ந்து அது தொடர்பில் எடுக்

02

## காரைநகரில் காணி சுவீகரிக்கும் முயற்சி மக்களின் போராட்டத்தினால் நிறுத்தம்



யாழ்ப்பாணம், பெப்.20

காரைநகர் நீலங்காடுப் பகுதியில் கடற்படையின் தேவைக்காக பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிக்க எடுத்த முயற்சி காணி உரிமையாளர்கள், அரசியவாதிகள் இணைந்து காணியை அளக்க வந்த நிலஅளவை திணைக்கள அதிகாரிகளை வழிமறித்து போராட்டம் நடத்தியதால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஜே - 45 கிராம உத்தி யோகத்தர் பிரிவுக்குட் பட்ட 67 பேருக்கு சொந்த

02

## யாழ்ப்பாணத்தில் 8 பேருக்கு தொற்று

### கிளிநொச்சியிலும் இருவருக்கும் கொரோனா

யாழ்ப்பாணம், பெப். 20

வடக்கு மாகாணத்தில் மேலும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப் பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் நெல்லி யடி பொதுச் சந்தை வியாபாரி என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு

02

## அரசின் நடவடிக்கைகளால் நாடு தனிமைப்படத்தப்படும் அபாயம்

### பாக்கியசோதி சரவணமுத்து எச்சரிக்கை



கொழும்பு, பெப். 20

"அரசாங்கம் தனக்கு மேலும் நெருக்கடியை உருவாக் கிக்கொள்கின்றது" என தெரி வித்துள்ள மாற்றுக்கொள்கை கள் நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து, "சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படும் நிலையை உருவாக்குகின்றது" எனவும் எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன் றுக்கு அளித்த நேர்காணலில் இதனை அவர் தெரிவித்துள் ளார்.

"அரசாங்கம் தனக்கு மேலும் மேலும் நெருக் கடியை உருவாக்கிக்க

02

## ஆயிரம் ரூபா விடயத்தில் இழுத்தடிப்பு தொடர்கிறது

### நேற்றைய சந்திப்பிலும் இணக்கம் இல்லை

கொழும்பு, பெப். 20

பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கான சம்பள உயர்வு என்பது தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருந்துவருகின் றது. நேற்று நடைபெற்ற சந் திப்பில்கூட உறுதியான முடிவு எதுவும் எட்டப்படாமல் கூட் டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## ஜெனிவாவில்...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டுவரப்போவதாக முதன்மை நாடுகளின் இராஜதந்திரிகள் தெரிவித்து வந்தபோதிலும், அதனை உறுதிப்படுத்தும் வகையிலான அறிக்கை ஒன்று முதன்மை நாடுகளால் நேற்று வெளியிடப்பட்டது. இதனையடுத்தே கொழும்பில் இராஜதந்திர நகர்வுகள் சூடுபிடித்துள்ளன.

பிரிட்டன் தலைமையிலான முன்மை நாடுகள் குழுவில் ஜேர்மனி, கனடா, மசிடோனியா, மொன்டிநீக்றோ, மலாவி ஆகிய ஐந்து நாடுகளும் உள்ளன. இந்த நாடுகளின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்தும் வகையிலான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர முதன்மை நாடுகள் திட்டமிட்டுள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்தே மனித உரிமைகள் பேரவையில் இந்திய அரசாங்கத்தின் ஆதரவை இலங்கை கேட்டிருப்பதாக வெளிவிவகாரச் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கடிதம் ஒன்று அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. (அ)

## புதிய அரசமைப்பின்...

இந்நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு முன்னர் மாகாண தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்தால் அது அரசுக்கு பெரும் பின்னடைவாக அமையும் எனவும், வாக்குவங்கியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் அரச கூட்டணிக்குள் பிளவுகளை ஏற்படுத்தலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவேதான் புதிய அரசமைப்பு இயற்றப்பட்ட பின்னர் அதன் பிரகாரம் தேர்தலை நடத்தலாம் என்ற ஆலோசனை உயர்மட்ட ஆலோசகர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான ஆரம்பக் கட்ட வரைவு நகல் எதிர்வரும் மார்ச் மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப் படவுள்ளது. அதன்பின்னர் இதர பணிகள் இடம்பெற்று டிசெம்பர் மாதத்துக்குள் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் என நம்பப்படுகின்றது. ஆக 2022 இல்தான் மாகாணசபைத் தேர்தலுக்கு சாத்தியம் இருப்பதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில்...

கூடத்தில் 366 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது.

நெல்லியடி பொதுச் சந்தையில் இன்று வியாபாரிகளிடம் எழுமாறாக மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உள்படுத்தியதில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 442 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 9 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் 5 பேர் மிருசுவிலில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மன்னார் நானாட்டானில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுடன் தொடர்புடைய ஒருவரின் குடும்பத்தினருக்கே இவ்வாறு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் ஜாஎலக்கு சென்று திரும்பிய நிலையில் அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நிலையில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

மேலும் அச்சுவேலிச் சந்தையில் கடந்த வாரம் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட வியாபாரி ஒருவரின் மனைவிக்கும் கொரோனா தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டது.

அத்துடன், கிளிநொச்சி கரைச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்கள் இருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

## காரைநகரில்...

மான 50 ஏக்கர் காணிகளை கடற்படை தமது தேவைகளுக்காக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி இந்தக் காணிகளை அளவிடும் பணிகளுக்காக நிலஅளவைத் திணைக்களத்தினர் வருகை தந்தபோது அங்கு ஒன்று கூடியவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து நிலஅளவைத் திணைகளத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர ஈஸ்வரபாதம் சரவணபவன்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உட்பட அக்கட்சியின் பேச்சாளர் சுகாஷ் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ-எ)

## ஜெனிவா...

இதில் போர்க் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை திரட்டுதல் ஆய்வு செய்தல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி எதிர்கால விசாரணைக்கான முதற்கட்ட நடவடிக்கையாக அவற்றை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறை மீதான தோல்வி குறித்து சுட்டிக்காட்டி உள்ளதுடன் இலங்கையில் தொடர்ந்து மனித உரிமைகள் நிலைமையை கண்காணித்து அறிக்கைப்படுத்தவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசால் புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு சுயாதீனமற்றது எனவும் அந்த பிரேரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## அரசின்...

கொள்கின்றது. சர்வதேசரீதியில் தனிமைப்படுத்தப்படும் நிலையை உருவாக்குகின்றது" எனவும் தெரிவித்துள்ள அவர், மோதல்களை உருவாக்குகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஐம்பது வருடங்களில் வடபகுதி மக்கள் கிழக்கு மக்கள், முஸ்லீம்கள். மலையகத் தமிழர்கள் ஒன்றிணைந்தது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியிலேயே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என குறிப்பிட்டுள்ள பாக்கியசோதி சரவணமுத்து, நல்லிணக்கம் குறித்து தாங்கள் என்ன செய்கின்றனர் என்பது குறித்து அரசாங்கம் ஆழமாக சிந்திக்க வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

பொறுப்புக்கூறல் குறித்த குற்றச்சாட்டுகள் கேள்விகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராயவேண்டும், சிந்திக்க வேண்டும். சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க போன்ற ஒருவரிற்கு பொது மன்னிப்பை வழங்கிவிட்டு நாங்கள் உள்நாட்டு பொறிமுறைகளை முன்னெடுக்கின்றோம் என தெரிவிக்கவும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# ஐம்பதாயிரத்தை கடந்தது மேல்மாகாணத் தொற்று!



கொழும்பு, பெப். 20

மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளது.

கொவிட்-19 இரண்டாவது அலை ஆரம்பமானதை தொடர்ந்து இதுவரை மேல் மாகாணத்தில் பதிவான கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளது.

நேற்று முன் தினம் (பெப்-18) மேல் மாகாணத்தில் 225 தொற்றாளர்கள் பதிவானதை தொடர்ந்து மேல் மாகாணத்தில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 181 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரையில் கொழும்பு மாவட்டத்தில் 28 ஆயிரத்து 440 தொற்றாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 15 ஆயிரத்து 759 தொற்றாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 5 ஆயிரத்து 982 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளதாக கொவிட் 19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் மத்திய மாகாணத்தில் 6 ஆயிரத்து 216 தொற்றாளர்கள் பதிவாகியுள்ள நிலையில் அதில் கண்டி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 597 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 864 தொற்றாளர்களும் மற்றும் நுவரெலியாவில் 755 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

தென் மாகாணத்தில் 3 ஆயிரத்து 648 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 3 ஆயிரத்து 182 பேரும், கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 186 பேரும் பதிவாகியுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

# நாட்டில் மேலும் 248 பேருக்கு கொரோனா தொற்று கண்டறிவு!

கொழும்பு, பெப். 20

நாட்டில் மேலும் 248 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் இது வரையான மொத்த கொரோனா பாதிப்பு 78 ஆயிரத்து 668 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 743 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், கொரோனா தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 72 ஆயிரத்து 566 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, அவர்களில், இன்னும் ஐயாயிரத்து 672 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் இதுவரை 430 பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேரணியில்...

யில் கலந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறை இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை வீடு செல்ல அனுமதித்தனர். அது தொடர்பாகக் கேட்டபோதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

"பேரணி நடத்துவதற்குப் பல இடங்களில் நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்த இடங்களில் நீதிமன்றத் தடையை மீறி நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டவர்கள் வயது வித்தியாசம், தகுதி வித்தியாசம் இன்றிக் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் மீது நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பருத்தித்துறையில் கைது செய்யப்பட்ட இளைஞரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படும். அவர் வழக்கு விசாரணையை எதிர்கொள்வார்" என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

## ஈஸ்டர்...

கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையிட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குழுவொன்றை நியமித்துள்ளார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரனதுங்க, ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும், தேசிய பாதுகாப்பு துறைசார் மேற்பார்வை செயற்குழுவின் அறிக்கையும் ஜனாதிபதி அலுவலகத்தினால் குழுவிடம் வழங்கப்படும்.

குழுவின் பணிகளுக்கு வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை நெறிப்படுத்த ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் (சட்டம்) ஹரிகுப்தா ரோஹனதீர குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் அறிக்கை 2021 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## ஆயிரம் ரூபா...

பிலான கூட்டம் சம்பள நிர்ணய சபையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் சார்பில் ஒருவரும் தொழிற்சங்கங்கள் சார்பில் 8 பேரும் கலந்துகொண்டிருந்தனர். பெருந்தோட்ட நிறுவனங்களின் சார்பில் ஒருவர் மாத்திரமே கலந்துகொண்டதால் முடிவு எதுவுமின்றி கூட்டம் பிற்போடப்பட்டது என தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

"பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் சார்பில் ஒருவர் மாத்திரமே வருகை தந்ததால், பேச்சுவார்த்தையை காலம் கடத்த வேண்டிய தேவை சம்பள நிர்ணய சபைக்கு ஏற்பட்டது." - என்று அகில இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜா தெரிவித்துள்ளார்.

சகல அதிகாரங்கள் கொண்ட அரசாங்கத்திற்கு முதலாளிமார் சம்மேளனம் எவ்வாறு அழுத்தம் கொடுக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி முதல் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் இன்னும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Eelanadu ஈழநாடு
20.02.2021 சனிக்கிழமை
சார்வரி, மாசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# குடியுரிமை பறிக்கப்படுமா?

சரத்பொன்சேகா, சம்பிக்க ரணவக்க ஆகியோர் தங்களுடைய குடியுரிமையை பறிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என குற்றம்சாட்டியிருக்கின்றனர். ஆனால், தான் அதற்காக அஞ்சவில்லையென்றும் பொன்சேகா தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்ட வரலாறு ஒன்றிருக்கின்றது. 2025இல் பெரும் சவாலாக எழுச்சியுறக் கூடியவர்கள் என்னும் வகையில் சிலரது குடியுரிமை பறிக்கப்பட்டுவிடுமா என்னும் சந்தேகம் எழுந்திருக்கின்றது.

இவ்வாறானாதொரு பின்புலத்தில்தான் பொன்சேகாவும் சம்பிக்க ரணவக்கவும் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றனர். சம்பிக்க ரணவக்க, தான் சார்ந்திருந்த ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து விலகி, அண்மையில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருந்தார். அதேவேளை, '43' என்னும் அரசியல் இயக்கமொன்றையும் உருவாக்கியிருந்தார். இது, பொதுஜன பெரமுன அரசியல் வட்டாரத்தில் அச்சத்துடன் நோக்கப்படுவதாக கூறப்படுகின்றது. 2015இல் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை எதிர்த்து ஒருவேளை சம்பிக்க களமிறங்கினால், அது கடினமானதொரு சவாலை ஏற்படுத்தலாம் என்றும் நோக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் குடியுரிமை விவகாரம் தற்போது எட்டிப்பார்க்கின்றது. தங்களை நோக்கி சில சிக்கல்கள் ஏற்படலாமென்னும் ஊகத்தில் இவ்வாறு கூறுகின்றனரா?

பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்குள் சில பிரச்னைகள் எட்டிப்பார்க்கின்றன. விமல் வீரவன்சவை முன்வைத்து ஓர் உள்மோதல் உருவாகியிருக்கின்றது. தன்னை ஒருவேளை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றலாம் என்று விமல் வீரவன்சவே கூறுமளவிற்கு நிலைமைகள் சிக்கலடைந்திருக்கின்றன. இவ்வாறானதொரு நிலையிலேயே எதிரணியினர் மெதுவாக பலமடைந்து வருகின்றனர். கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம்மீது ஆரம்பத்திலிருந்த கவர்ச்சி மெதுவாக தற்போது தேயத் தொடங்கியிருக்கின்றது. இதனை எதிரணியினர் உன்னிப்பாக நோக்கிக் கொண்டிருக்கின்றனர். தங்களின் நேரத்திற்காக அவர்கள் காத்திருக்கின்றனர். அதேவேளை, சர்வதேச ரீதியிலும் பிரச்னைகள் தீவிரமடைகின்றன. அருகாமையிலுள்ள இந்தியாவுடன் உறவில் விரிசல்கள் ஏற்பட்டுவருகின்றன.

இவ்வாறானதொரு சூழலில்தான், பொதுஜன பெரமுன அரசாங்கம் பல்வேறு நெருக்கடிளுக்கு முகம் கொடுத்துவருகின்றது. இந்த பின்புலத்திலேயே பொன்சேகாவும் சம்பிக்கவும் தங்களின் குடியுரிமை இலக்கு வைக்கப்படுவதாக தெரிவித்திருக்கின்றனர். இதன் மூலம் இலங்கையின் ஜனநாயகம் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதே அவர்களின் நோக்கமாக இருக்கலாம். ஆனால், இவ்வாறான அனைத்து விடயங்களும் அரசாங்கத்திற்கு ஏதோவொரு வகையில் நெருக்கடிகளையே ஏற்படுத்தும்.

பொதுவாக, பலமான நிலையில் இருக்கின்றபோது விமர்சனங்களை, கண்டனங்களை பொருட்படுத்துவதில்லை. இது, ஒரு பலவான் மனோநிலை. கோட்டாபய அரசாங்கம் இவ்வாறானதொரு பலவான் மனோநிலையில்தான் சிந்திக்கின்றது. தன்னை நோக்கி வரும் அனைத்து விடயங்களையும் பலவான் மனோநிலையில் அணுக முற்படுகின்றது. 2015இல் மகிந்த ராஜபக்ஷவும் அவ்வாறானதொரு, மனோநிலையில்தான் இருந்தார். தற்போதும் அவ்வாறானதொரு மனோநிலையில்தான் ராஜபக்ஷக்கள் இருக்கின்றனர். ராஜபக்ஷக்களை எவருமே வெளியிலிருந்து அசைக்க முடியாது. இவ்வாறான பின்புலத்தில்தான் கட்சிக்குள் அசைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அது எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதை பொறுத்திருந்துதான் நோக்க வேண்டும்.

# விஜய குமாரதுங்க: 33ஆவது சிரார்த்த தினம்

## 'ஈழநாடு' பத்திரிகைக்கு ஹெக்டர் கொப்பேகடுவவுடன் அளித்த பேட்டி!

**- அனந்த பாலகிட்ணர் -**



*ஸ்ரீ லங்கா மக்கள் கட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கணவருமான விஜயகுமாரதுங்கவின் 33ஆவது சிரார்த்த தினம் கடந்த 16ஆம் திகதி கொழும்பில் நினைவுகூரப்பட்டிருந்தது.*

*விஜயகுமாரதுங்க சிங்கள திரையுலகில் ஒரு பிரபல நட்சத்திரமாக விளங்கினார். 1982ஆம் ஆண்டு அக்டோபரில் இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார பீரங்கியாக விஜயகுமாரதுங்க களமிறங்கியிருந்தார்.*

*அப்போது, மிகப்பலமான நிலையில் ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன 1978ஆம்ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகஞ்செய்ததையடுத்து மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாக மட்டுமல்ல. உலகின் முதலாவது பெண் பிரதமராகவும் இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையை நீக்கிவிட்டிருந்தார்.*

**வடக்கு மாகாணம் முக்கிய இலக்கு**

*இதன்காரணமாக, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமுடியாத நிலை சிறிமாவோவுக்கு ஏற்பட்டிருந்த காரணத்தினால் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி சார்பில் அக்கட்சியின் முக்கிய உறுப்பினராகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் விவசாயத்துறை அமைச்சராகவுமிருந்த ஹெக்டர் கொப்பேகடுவ அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தார் அச்சமயம் வடமாகாணமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான இலக்காக இருந்தது. ஏனெனில், வடபகுதி விவசாயிகள் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் மிகவும் பயனடைந்திருந்தனர். ஈழநாடு பத்திரிகையும் அச்சமயம் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களை விரிவான முறையில் வாசகர்களுக்கு தந்திருந்தது.*

**யாழ்ப்பாண விஜயம்**

*ஹெக்டர் கொப்பேகடுவ ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்து பல்வேறு இடங்களுக்கும் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு துணையாக விஜய குமாரதுங்கவும் அப்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.*

*அச்சமயம் ஒருநாள் காலை, 'ஈழநாடு' அலுவலகத்துக்கு நான் வந்ததும் பிரதம ஆசிரியர் அமரர் என். சபாரத்தினம் என்னை அழைத்து, உடனடியாகவே சுபாஸ் ஹோட்டலுக்கு செல்லுமாறும், அங்கே ஜனாதிபதி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ காலை உணவை முடித்துக்கொண்டதும் பலாலியிலிருந்து கொழும்பு திரும்பவுள்ளார் எனவும் தெரிவித்ததோடு, எவ்விதப்பட்டும் அவரிடம் ஒரு பேட்டியை எடுத்து வரும்படியும் என்னைப் பணித்தார்.*

*பிரதம ஆசிரியரின் வேண்டுகோளை ஏற்று உடனடியாகவே சுபாஸ் ஹோட்டலுக்கு எனது மிதிவண்டியில் சென்றேன். அங்கே ஹோட்டலுக்கு வெளியே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் நின்றிருந்தனர்.*


*அப்போது 'ஈழநாடு' பத்திரிகை மிகப்பிரபலமானதாக இருந்த நிலையில், சுபாஸ் ஹோட்டலில் ஜனாதிபதி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவவுடன் நின்றிருந்த அவரது ஆதரவாளர்களுக்கு என்னை அறிமுகஞ் செய்வதில் சிரமம் இருக்கவில்லை.*

**றீகல் சினிமா அதிபர் றொபின் தம்பு**

*அப்போது, ஹெக்டர் கொப்பேகடுவ மற்றும் விஜயகுமாரதுங்க ஆகியோருடன் நின்றிருந்த உயரமான நபர் ஒருவர் எனது பெயரைக் கேட்டதும் தன்னை எனது தந்தையார் பாலகிட்ணரின் நண்பர் என்று அறிமுகஞ் செய்ததோடு, உடனடியாகவே ஒரு குறுகிய பேட்டிக்கு சுபாஸ் ஹோட்டலின் மேல் மாடியில் ஏற்பாடு செய்தார். அவ்வாறு எனக்கு உதவிய எனது தந்தையாரின் நண்பர் வேறு யாருமல்லர். இலங்கைத் திரையுலகில் ஒரு முக்கியஸ்தராக இருந்தவரும், யாழ்ப்பாணம் றீகல் சினிமாவின் உரிமையாளருமான றொபின் தம்பு அவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அச்சமயம், விஜயகுமாரதுங்க எனது பத்திரிகையான 'ஈழநாடு' பத்திரிகைபற்றி விரிவாக கேட்டறிந்ததோடு, மேல் மாடியில் தம்மோடு வந்து, காலை உணவை அருந்தியவாறு பேட்டியை எடுக்குமாறு* (04ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திக்கும் நண்பர்களால் சந்தோஷம் அதிகரிக்கும் நாள். தேக ஆரோக்கியம் சீராகும். தெய்வத் திருப் பணிகள் மீதியும் இன்று கை கூடும். நூதனப் பொருட் களின் சேர்க்கை உண்டு.

**இடபம்**
பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும் நாள். பாதியில் நின்ற பணிகள் இன்று மீதியும் கை கூடும். வழக்குகள் சாதகமாக முடியும். வெளியுலகத் தொடர்பு வியக்கும் விதத்தில் அமையும்.

**மிதுனம்**
நட்பால் நன்மை கிட்டும் நாள். பணவரவு எதிர்பார்த்தபடி அமையும். ஆடை, ஆபரணப் பொருட்களை வாங்கி மகிழும் யோகம் உண்டு. குழந்தைகளால் குதூகலம் ஏற்படும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும்.

**கடகம்**
சுபச் செய்திகள் வந்து சேரும் நாள். வரவு திருப்தி தரும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். தொழில் தொடர்பாக நண்பர்களைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

**சிம்மம்**
யோகமான நாள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தி யாகும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை யாகும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர்.

**கன்னி**
ஆச்சரியப்படத்தக்க செய்திகள் வந்து சேரும் நாள். நண்பர்களின் சந்திப்பால் நலம் கிடைக்கும். நேற் றைய பிரச்சினை இன்று முடிவிற்கு வரும். பணத் தேவைகள் மதியத்திற்கு மேல் பூர்த்தியாகும்.

**துலாம்**
மனக்கலக்கம் ஏற்படும் நாள். குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை . நண்பர்களால் சிறு ஏமாற்றங்கள் உண்டு. உத்தி யோகத்தில் பிரச்சினை ஏற்படலாம்.

**விருச்சிகம்**
நட்பால் நன்மை கிட்டும் நாள். நல்ல தகவல் இல்லம் தேடி வரலாம். வி.ஐ.பி.க்கள் வீடு தேடி வருவர். தொலை பேசி வழித் தகவலால் தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு**
அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள். தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. ஆரோக்கியம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**மகரம்**
முன்னேற்றம் கூடும் நாள். முக்கியப் புள்ளிகளின் சந்திப்பு உண்டு. வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். வரவு திருப்தி தரும். அரசியல் வாதிகளால் அனுகூலம் உண்டு.

**கும்பம்**
எதிர்பாராத விரயத்தால் இன்னல்கள் ஏற்படும் நாள். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். தொழிலில் குறுக்கீடுகள் உண்டு. முக்கியக் காரியமொன்றிற்கு முடி வெடுக்க முடியாமல் தவிப்பீர்கள்

**மீனம்**
எடுத்த முயற்சியில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள். இல்லத்தில் சுபகாரியப் பேச்சு நல்ல முடிவிற்கு பணவரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும். நீண்ட நாளைய எண்ணங்கள் நிறைவேறலாம்.

# சுவிஸில் தஞ்சமடைந்த எம்மவர்களை உடனே திருப்பி அனுப்பக்கூடாது!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சுவிஸ் தூதரிடம் கோரிக்கை

**யாழ்ப்பாணம்,பெப்.20**

**"சுவிஸ் நாட்டில் தஞ்சம் புகுந் துள்ள எமது தமிழ் மக்களை உடனே திருப்பி அனுப்பக்கூடாது" இவ் வாறு தம்மை சந்தித்த அந்த நாட் டின் தூதுவர் டொமினிக் பேர்கல ரிடம் வலியுறுத்தியுள்ளனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்கள்.**



விசேட பயணமாக யாழ்ப் பாணம் வந்துள்ள சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் பேர்கலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் களான சி. சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர் மலநாதன் ஆகியோரை நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் சந் தித்துப் பேசினார்.

இதன் பின்னர், இந்தக் கலந் துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் சிலவற்றை ஊடகங் களுக்கு தெரிவித்தனர். அவ் வாறு தெரிவிக்கப்பட்ட விட யங்கள் வருமாறு:

தமிழருக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்ட இனப் படுகொலை தொடர்பில் ஜெனி வாவில் கொண்டு வரப்பட வுள்ள தீர்மானம் குறித்தும் முக்கியமான நிலைப்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையா டப்பட்டது. அத்துடன் 30/1 34/1 40/1 தீர்மானங்களுக்கு மேலதிகமாக இப்பொழுது வரப் போகின்ற தீர்மானம் தொடர் பில் ஆராயப்பட்டது.

இவை தவிர, தொல்பொருள் திணைக்களம் ஊடான நிலப் பறிப்புக்கள், வனவள திணைக் களத்தின் ஊடான நில ஆக்கிர மிப்புக்கள் மற்றும் அரசாங்கத் தின் மத்திய அமைச்சின் கீழ் இருக்கின்ற நிறுவனங்களை வைத்து மக்களின் நிலங்களை மட்டும் அல்லாது அவர்களின் இருப்புகளையும் இலங்கை அர சாங்கம் கேள்விக்குறியாக்கு வது தொடர்பிலும் அரசியல் கைதிகளின் விவகாரம் குறித் தும் பேசப்பட்டது.

இதன்போது, சுவிஸ் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ள தமிழ் மக்களை உடனே திருப்பி அனுப் பக்கூடாது என்று கோரி கடிதம் ஒன்றை கையளித்தோம் என் றும் கூட்டமைப்பினர் தெரிவித் தனர். இதற்கு கடந்த ஒன்றரை வருடங்களாக திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை கையளிக்கவில்லை என்றும், அவ்வாறான எண்ணம் தமக்கு இல்லை என்றும் அவர் குறிப் பிட்டார் எனவும் கூட்டமைப் பினர் தெரிவித்தனர். (ஐ-3)

# 150 கிலோ கஞ்சா வவுனியாவில் நேற்று எரியூட்டி அழிக்கப்பட்டன

வவுனியா, பெப். 20

வவுனியா மேல் நீதிமன்றில் நிறைவடைந்த வழக்குகளின் சான்றுப்பொருளான 150 கிலோ கஞ்சா போதைப்பொருள் எரியூட்டி அழிக்கப் பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராம நாதன் கண்ணன் முன்னிலையில் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அண்மையாகவுள்ள வெற்றுக் காணியில் நேற்று இந்தப் போதைப் பொருள் அழிக்கப்பட்டது.

முடிவடைந்த வழக்குகளின் சான்றுப் பொருள்களான சுமார் 150 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருட்கைள அழிக்க மன்று உத் தரவிட்ட நிலையில் வவுனியா மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசனின் ஏற்பாட்டில் உத்தியோகத்தர்களால் அவை எரியூட்டி அழிக்கப்பட்டன.



வவுனியா நீதிமன்ற வளாகப் பொறுப்பதிகாரி ஏக்கநாயக, ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஆகியோரினால் இடம் ஒழுங்கு செய்யப் பட்டது. (ஐ)

## விஜய குமார...

கேட்டுக்கொண்டார்.

அவரது வேண்டுகோளை ஏற்று நானும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து, ஹெக்டர் கொப்பேகடுவவுடன் எனது பேட்டியை ஆரம்பித்தேன். எனது பேட்டியில் யாழ்ப்பாணம் விவசாயிகளினுடைய எதிர் பார்ப்புகள் பற்றிய விடயங் களே முக்கியம்பெற்றிருந்தன. ஏனெனில், சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதம மந்திரியாக இருந்தபோது யாழ்ப்பாண விவசாயிகள் பெரிதும் பயனடைந்திருந்தனர்.

ஹெக்டர் கொப்பேகடுவவுடன் சேர்ந்து விஜ யகுமாரதுங்கவும் மிகவும் சுவாரஸ்யமான முறை யில் தத்தமது கருத்துக்களை வெளியிட்டவண்ண மிருந்தனர். அச்சமயம் பேட்டியை எடுப்பதிலேயே எனது முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டி ருந்தபோது அருகேயமர்ந்திருந்த விஜயகுமாரதுங்க என்னைநோக்கி, "நீர் கதைத்துக்கொண்டிருக் கிறீரே தவிர, எதனையும் சாப்பிடவில்லை" என்று கூறி, தனது கையாலேயே சாப்பாட்டு மேசையில் வைக்கப்பட்டிருந்த இடியப்பம், ரசம், இறால் கறி என்பவற்றை எனது உணவுத்தட்டில் பரிமாறினார்.

அப்போது நான் விஜயகுமாரதுங்கவிடம், "உங்களது நேரத்தை எடுக்கநான் விரும்பவில்லை. நீங்கள் இன்னும் சிறிதுநேரத்தில் பலாலி விமான நிலையம் சென்று, கொழும்புக்கு திரும்பவேண்டி யுள்ளது." எனக்கூறினேன். அச்சமயம் விஜய குமாரதுங்க, 'அதைப்பற்றி எதுவும் யோசிக்க வேண்டாம், நீர் நன்றாக உணவருந்தவும்' என்று என்னைப் பரிவோடு கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, விஜயகுமாரதுங்க ஆயுதப் போராட்டம் வடக்கு-கிழக்கு ஆரம்பித்த காலப் பகுதியில் தமிழ் நாட்டில் புளொட் அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் பத்மநாபா ஆகி யோரையும் தமது பாரியார் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவுடன் சென்று சந்தித்திருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் எண்பதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வந்து, அச்சமயம் தனியொரு ஆயுதப் போராட்டக்குழுவாக பலம்பெற்றிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர் சந்தித்தி ருந்தார். அப்போது தமிழீழ விடுதலைப் புலி களின் யாழ். மாவட்ட தளபதியாக இருந்த கிட்டு என்றழைக்கப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமார், மிக நேர்த்தியான முறையில் விஜயகுமாரதுங்கவை வரவேற்றிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.



பொத்துவில் - பொலிகண்டி பேரணி

# யாழ். மாநகர மேயரிடம் பொலிஸார் வாக்குமூலம்

## சிங்கள மூலத்தில் கையெப்பமிட மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டமை தொடர்பில் யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனிடம் பொலிஸார் நேற்று மதியம் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.


யாழ். மாநகர முதல்வரின் அறைக்கு பருத்தித்துறை, மன்னார் பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் வாக்குமூலங்களை பதிவு செய்தனர்.

வாக்குமூலத்தை சிங்களத்தில் பதிவு செய்த பின்னர் அதில் மணிவண்ணனை கையொப்பமிடுமாறு அவர்கள் கூறினர். அதற்கு அவர், தனக்கு சிங்கள மொழி தெரியாது என்றும், தெரியாத மொழியில் உள்ள ஆவணத்தில் கையொப்பமிட முடியாதெனவும் கூறி அவர் கையொப்பமிட மறுத்து விட்டார்.

தமிழில் வாக்குமூலத்தை பதிவு செய்தால் கையெழுத்திடத் தயார் என்று அவர் கூறியதற்கு அமைய, தமிழில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு அவரிடம் கையெழுத்துப் பெறப்பட்டது. (ஐ)

# குடியுரிமை பறிப்பு திட்டம் பற்றியே சஜித் தரப்பினர் என்னுடன் பேசினர்!

## ஐ.தே.கவின் தலைவர் ரணில்



கொழும்பு, பெப். 20

**முக்கிய சில அரசியல் தலைவர்களின் குடியுரிமையை இரத்து செய்ய அரசாங்கம் கடும் முயற்சிகளை எடுத்துள்ளது. அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையின் பாராதூர தன்மையை அறிந்தே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்கள் என்னை சந்தித்து கலந்துரையாடினர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கொழும்பில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கை பாராதூரமானதாகும். முக்கிய சில அரசியல் தலைவர்களின குடியுரிமையை இரத்து செய்யவே ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர்.

இது குறித்து ஐக்கிய தேசிய கட்சி கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன் சட்டதரணிகளுடனும் கலந்துரையாடினோம்.

அந்த அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை ஒன்றிணைக்குமாறு கோரப்பட்டது. இதனடிப்படையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினேன். அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கை குறித்து இதன் போது பரந்தளவில் பேசினோம் என்றார். இதே வேளை, அரசியல் பழி வாங்கல் குறித்த ஆணைக்குழு விற்கு எதிராக ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. (ஐ)



# இரண்டாம் மொழி சிங்களம் கற்கைநெறி பூர்த்தி நிகழ்வு!

முல்லைத்தீவு, பெப். 20

பொதுச்சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தால் முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு 150 மணித்தியாலயங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் இறுதி நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றுது.

மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணக்கு இந்த நிகழ்வு ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.புனிதகுமார், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் லிசோ கேகிதா ஆகியோர் பங்கேற்றனர்.

இந் நிகழ்வில் பயிற்சி நெறியின் கற்கை வெளிப்பாடுகளை உள்ளடக்கியதாக பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் ஆளுமையை வெளிப்படுத்துகின்ற வகையில் பல்துறைப்பட்ட கலைநிகழ்வுகள் மற்றும் அனுபவப்பகிர்வுகள் இடம்பெற்றன.

மேலும் பயிற்சி நெறியின் வளவாளர்களாக பங்குபற்றிய சுமித் பிரசன்னா, ஆர்.சபிதா மற்றும் மாவட்ட செயலக தேசிய மொழிகள் பிரிவின் இணைப்பாளர் தாமரைச் செல்வி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# பிரபல சமூக செயல்பாட்டாளரை 2ஆம் மாடிக்கு அழைத்தது ரி.ஐ.டி

வடமராட்சி, பெப். 20

யாழ்ப்பாணம் - வடமராட் சியின் பிரபல சமூக செயல் பாட்டாளரான சிங்கபாகு சிவகுமாரை (பொக்சிங் சிவகுமார்) கொழும்பு 2ஆம் மாடிக்கு பயங்கரவாத தடுப்பு பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள் ளனர்.

பருத்தித்துறை - புலோலி மத்தியை சேர்ந்த அவரின் வீட் டுக்கு நேற்று சென்ற பொலிஸார் புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து அவருக்கு கிடைக்கும் நிதி பற்றி வாக்கு மூலம் பெற்றனர்.

இதன்போது, புலம்பெயர்ந் தவர்களிடம் இருந்து அவருக்கு எவ்வாறு நிதி கிடைக்கிறது. யார் அனுப்புகிறார்கள் என்ற கேள்விகளை அவரிடம் பொலிஸார் கேட்டனர் என்று அவர் தெரிவித்தார்.

விசாரணையை தொடர்ந்து எதிர்வரும் 23ஆம் திகதி அவரை கொழும்பு 2ஆம் மாடிக்கு விசாரணைக்கு வருமாறு கடிதம் ஒன்றையும் கையளித்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிவகுமார் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சி.வி.விக் னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மீன் சின்னத்தில் போட்டியிட்டவர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# ரூ. 100 கோடி நட்டஈடு கேட்டு ரிஷாத் பதியுதீன் எம்.பி. வழக்கு

கொழும்பு, பெப். 20

இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவிடம் 100 கோடி ரூபா இழப்பீடு கேட்டு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜயந்த சமரவீர வெளியிட்ட கருத்தால் தமக்கு சிரமங்களும், கடும் அசௌகரியங்களும் ஏற்பட்டுள்ளன என்று ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தனக்கு 100 கோடி ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு களுத்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜயந்த சமரவீர, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் ரிஷாத் பதியுதீன் சம்பந்தப்பட்டுள்ளார் என்று கூறி குற்றஞ்சுமத்தியமையையும் ரிஷாத் தனது மனுவில் தெரிவித்துள்ளார். (ஐ)

# வல்லைவெளியில் பெண்ணிடம் சங்கிலி பறிப்பு

வடமராட்சி, பெப். 20

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை தள்ளி வீழ்த்தி விட்டு, அவரிடம் இருந்து சங்கிலியை பறித்து சென்றனர் வழிப்பறிகாரர்கள். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் ஒரு மணியளவில் வல்லைவெளி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது: உடுப்பிட்டியை சேர்ந்த குறித்த பெண் தனது கடமையின் பொருட்டு நேற்று யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்தார்.

அப்போது, அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்களில் வந்த வழிப்பறிகாரர் இருவர், ஆட்கள் எவரும் இல்லாத நேரம் பார்த்து பெண்ணை உந்துருளியுடன்தள்ளி விழுத்தி விட்டு, அவரின் தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றுள்ளனர்.இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிவந்த தாயார் உயிரிழந்தார்!

முல்லைத்தீவு, பெப். 20

இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வந்த தாயார் ஒருவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கைவேலியை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான சுந்தரலிங்கம் கனகமணி என்பவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் இவரின் மகனான சுந்தரலிங்கம் சுரேஷ்குமார் காணாமல் ஆக்கப்பட்டார்.



தனது மகனை தேடி வந்த இவர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முன்னெடுத்த போராட்டங்களிலும் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் பங்கேற்று வந்தார்.

தனது மகனின் வருகைக்காக கடந்த 11 ஆண்டுகள் போராடி வந்த இவர், தனது மகன் தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் சுகயீனம் காரணமாக நேற்று உயிரிழந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து 4 ஆண்டுகளைக் கடக்கும் நிலையில் இதுவரை, 65இற்கும் மேற்பட்ட உறவுகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெடிபொருட்களுடன் கைதானவர் வி.ஐ.பிகளை கொல்ல திட்டமாம்!

வவுனியா, பெப். 20

வவுனியாவில் பெருந்தொகை வெடிபொருட்களுடன் கைதானவர் முக்கிய பிரமுகர்களை கொல்வதற்குத் திட்டமிட்டிருந்தார் என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம், வவுனியா நெடுங்கேணியில் வெடிபொருட்களுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 24 கிலோ கிராம் சி4 வெடிமருந்து, 5 கிலோ கிராம் பி.இ. வெடிமருந்து, 148 மிதிவெடிகள், 22 டெட்டனேட்டர்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணியாளரான அந்த இளைஞர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். நெடுங்கேணி, சேனைப்புலவு பகுதியில் வாடகைக்கு வீடொன்றை பெற்று தங்கியிருக்கிறார்.

அந்த வெடிபொருட்களை அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டார் என்றும், வெளிநாட்டில் இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த ஒருவருடன் தொடர்பில் இருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அம்பாறையில் நிலநடுக்கம்!

அம்பாறை, பெப். 20

அம்பாறை மாவட்டத்தில் 4.0 ரிச்டர் அளவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்த மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்தது.

அம்பாறை கடற்கரைப் பிரதேசங்களான பொத்துவில் சர்வோதயபுரம், சின்ன ஊறணி, ஜலால்தீன் சதுக்கம், களப்புகட்டு ஆகிய கடற்கரை கிராமங்களிலேயே குறித்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.44 மணிக்கு இந்த நில அதிர்வு உணரப்பட்டது. சுமார் 2 முதல் 3 நிமிடங்கள் நில அதிர்வு உணரப்பட்டதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

குறித்த நில அதிர்வால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை. எனினும், மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# 312 முறைப்பாடுகளுக்கு கடந்த ஆண்டில் தீர்வு

## இலங்கை பத்திரிகை முறைப்பாடு ஆணைக்குழு

கொழும்பு, பெப். 20

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கடந்த 2020 ஆம் ஆண்டு 312 முறைப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, 207 முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி தீர்வளிக்கப்பட்டது. மேலும், 76 முறைப்பாடுகள் தொடர்பில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. எஞ்சிய 29 முறைப்பாடுகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஆசிரியபீட ஒழுக்கக் கோவைக்கு முரணாகப் பிரசுரிக்கப்பட்ட செய்திகள் தொடர்பானவையாகும்.

இந்நிலையில் பொதுவாக நிர்ணயிக்கப்பட்ட ஆசிரியபீட ஒழுக்கக்கோவையை பின்பற்றுவதன் ஊடாக இத்தகைய முறைப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதை பெரிதும் ஊக்குவிப்பதாகவும் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராயும் குழுவானது 11 உறுப்பினர்களை கொண்டுள்ளது. இதில் மேற்படி குழுவின் தலைவராகக் கடமையாற்றும் சட்டத்தரணியொருவர் உள்ளடங்கலாக ஊடகவியலாளர்கள் அல்லாத 6 பேர் அங்கம் வகிக்கின்றனர். குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய ஐவரும் ஊடகவியலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனநாயக இடைவெளியை அதிகரிக்கும் செயலில் அரசு

## மக்கள் இயக்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 20

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றவர்கள் மீது அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஜனநாயக இடைவெளியை அதிகரிக்கும் என்று பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை பேரணி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களை பொலிஸார் பல்வேறு காரணங்களை கூறி விசாரணைகளுக்கு அழைக்கிறார்கள். இதனால், பல அசௌகரியங்களுக்கு மக்கள் உள்ளாகிறார்கள். இவை நாட்டின் ஜனநாயக இடைவெளியை மேலும் அதிகமாக்கும் - என்றனர்.

# மரண அறிவித்தல்

மலர்வு 04 - 07 - 1936



உதிர்வு 19 - 02 - 2021

## இராமமூர்த்தி பவானியம்மா

இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம், வழக்கம்பரையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமமூர்த்தி பவானியம்மா நேற்று (19.02.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் ப.இராமமூர்த்தியின் துணைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி – அமிர்தாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும் இராசலட்சுமி, ஶ்ரீறஞ்சினி, பத்மாவதி, சீதாலட்சுமி, சுசிலாதேவி, வனஜா, சிவகுமார், லலிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், வீராச்சாமி, துரைராஜா, பியவர்த்தனா, கோணேசன், சபேசன், சிவகுமார், சுமஞ்சனாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் நாகறஞ்சினி, நந்தகோபாலன், அரிகரன், நந்தகுமார், நந்தினி, சத்தியகுமார், சாந்தகுமார், அதீஸ்குமார், வசந்தகுமார், விஜயகுமார், பிரதாப், ராஜன், சையிலஜா, சசிரேகா, கோகுலன், சுஜீவன், சிந்துஜன், சாகித்தியன், செவ்வந்தி, லாவண்யா, நிசாதபிரியன், சாருமதி, வான்மதி, பைரவி, சுருதிகன், சதுர்த்திகன், ராகவர்த்தனி, ராகப்பிரியன், பிருந்தாபன், சாரங்கன், கம்சத்வனி, கலைவாணி, ரேவதி ஆகியோரின் பேர்த்தியும் சகானா, சாம்பவி, நதீசன், பூஜா, காணன், ஆரபி, அக்ஷயன், கிருத்திகா, சைந்தவி, தீபிகா, ஆற்றலோன், சாயீஸ்வரன், சஞ்சயன், ஆதர்சனா, மதுமிதா, மதனிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொல்புரம், வழக்கம்பரை.**

**தகவல்: இ.சிவகுமார் - மகன்**
**குடும்பத்தினர்.**

# “சீனாவின் காலனித்துவ நாடாக இலங்கையை மாற்றுகிறது அரசு”

அக்கரைப்பற்று, பெப். 20

சீன அரசாங்கத்தின் அனுசரணையோடு எமது இனத்தை அழித்த அரசு, இப்போது சீனாவின் காலனியாக நாட்டை மாற்றி வருகின்றது, இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்.

நேற்று திருக்கோவிலில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

“பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரணி குறித்து என்னிடம் வாய்மொழி மூல முறைப்பாட்டை பெற்றனர். நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களாலும் சிவில் அமைப்புக்களாலும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் பேரணியின் மூலம் எங்களுடைய பூர்வீக நிலங் களில் நிம்மதியாக வாழ விட வேண்டும் என்பதை உணர்வு பூர்வமாக சொல்லியிருக்கிறார் கள் இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு ஏற்றுக்கொள்ளாமல் மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மை துன்புறுத்தும் வேலையை அரசு மேற்கொள்கின்றது. இவ்வாறு தொடர்ந்தும் இருக்க முடியாது. இந்த நாட்டில் ஜனநாயகம், சுதந்திரம் குறித்து பேசுகின்றனர். ஆனால், சிறுபான்மை சமூகமாகவுள்ள எங்களுக்கு நீதி சுதந்திரம் கிடைக்கப் பெறுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. தமிழ் பேசும் இனங்களை நசுக்குவதிலேயே இந்த அரசு குறியாகவுள்ளது.

தமிழர்களின் நீண்ட கால பிரச்சினைகளில் அரசாங்கம் எந்தவொரு தீர்வை நோக்கி நகரவில்லை என்பதனை இந்தியா அடிக்கடி இலங்கை அரசினை கண்டிப்பதன் காரணமாக இன்று அரசு இந்தியாவை கூட வஞ்சித்துள்ளது. இலங்கையில் தற்போது சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதிகளை கூட சீன அரசுக்கு தாரை வார்த்திருக்கும் விடயம் இந்த நாட்டை அழிவு பாதைக்கு இட்டு செல்லும் - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)



# கூட்டமைப்பின் எம்.பிகளுக்கு மன்னாரில் நேற்று தடுப்பூசி!

மன்னார், பெப். 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நேற்று மதியம் மன்னாரில் கொரோனா தடுப்பூசியை பெற்றனர்.
மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்வாறு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

பொலிஸார் மீதான முறைப்பாடுகள்:

# நடவடிக்கைகள் எடுக்க தயாரகிறது திணைக்களம்

கொழும்பு, பெப். 20
பொலிஸ் உத்தியோகத்தர்களின் துர்நடத்தை, கடமை தவறுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கிடைத்துள்ள அநாமதேய முறைப்பாடுகள் குறித்து புலனாய்வு பிரிவினர் ஊடாக தகவல்களை திரட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதற்கான ஆலோசனைகளை பொலிஸ்மா அதிபருக்கு வழங்கியுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.
அநாமதேய முறைப்பாடுகள் தொடர்பில் மிக ஆழமாக ஆராய்ந்து தவறு செய்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
இந்த விசாரணைகள் குறித்து பிராந்தியங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உரிய தகவல்கள் பதிவு செய்யப்படாமையால், அது குறித்த விசாரணைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.
முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் போது, விசாரணைகளுக்கு தேவையான ஆவணங்களையும் இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது.
இதேவேளை, போலி முறைப்பாடுகளை முன்வைப்போருக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர்சந்திரா பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார். (ஐ)

# பாதுகாக்கப்பட்ட தாவரங்கள் விலங்கினங்கள் கணக்கெடுப்பு

கொழும்பு, பெப். 20
நாட்டில் பாதுகாக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் தற்போதைய நிலை குறித்து நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பை நடத்த வன ஜீவ ராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.
இது தொடர்பான தரவுகள், கடந்த காலங்களில் சரியான முறையில் புதுப்பிக்கப்படவில்லை என்பதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்தார்.
இதற்கமைய, பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தின் கீழ், கணக்கெடுப்பை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதற்காக சூழலியலாளர்கள் மற்றும் சூழலை பாதுகாக்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவுள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்தார்.
நாட்டில் பாதுகாக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் குறித்த செம்பட்டியல் தரவு புத்தகம் புதுப்பிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அண்மைக்காலமாக இடம்பெற்ற சில சம்பவங்கள் காரணமாக குறித்த தரவு புத்தகம் சரியாக புதுப்பிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சீனாவுக்கு ஆதரவாக அரசு:

# சர்வதேசத்துக்கு முகம் கொடுக்க முடியாமைக்கு இதுவே காரணம்

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



**கொழும்பு, பெப். 20**
**சீனா சார்பாக செயல்படுவதால் இன்று சர்வ தேசத்திற்கு முகம் கொடுக்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.
அங்கு மேலும் கூறுகையில், சீனாவில் எவ்வாறு ஒரு கட்சி அரசியல் ஆட்சி வகிக்கிறதோ அதே நிலையை இங்கும் கொண்டு வருவதற்கு முயல்கின்றனர். குடும்ப ரீதியாக மொட்டு கட்சியை நிலைப்படுத்த எடுக்கும் முயற்சிகளின் ஓர் அங்கம்தான் எதிர்க்கட்சித் தலைவரின் பிரஜாவுரிமையை இல்லாமல் ஆக்கும் இந்த ஆணைக்குழுவாகும். இது ராஜபக்ஷக்களின் பகல் கனவு.
திருகோணமலை எண்ணெய் குதங்களை இலங்கைக்கு மீளப் பெறுவதாக உதய கம்மன்பில நேற்று அறிவித்தார். ஆனால், ஒப்பந்தம் அவ்வாறே செயல்படுத்தப்படும் என இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. மீண்டும் பொய் கூறி மக்களை ஏமாற்றும் செயல் இது.
எல்லோராலும் விரும்பப்படும் ஓர் இராஜதந்திர அரசியல்வாதிதான் இம்ரான் கான் அவருடைய பாராளுமன்ற உரையை கேட்க மிக ஆர்வமாக இருந்தோம். ஆனால், இறுதி நேரத்தில் அதை இரத்துச் செய்துள்ளனர். இன்னும் சில நாட்களில் அவருடைய பயணத்தையும் இரத்துச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இதுதான் இவர்களின் வெளிவிவகார கொள்கை. சீனா சார்பாக செயற்படுவதால் இன்று சர்வதேசத்திற்கு முகம் கொடுக்க முடியாத அளவில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.
கடந்த ஒரு வருடத்தில் இந்த அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விரோத செயல்பாடுகளை முன்னிலைப்படுத்தி ஜெனிவாவில் மூன்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பழைய யுத்தக் குற்றச்சாட்டுகள் அல்ல. புதிய குற்றச்சாட்டுகள். இந்த சிக்கல்களை இந்த அரசாங்கம் தானாகவே தேடிக் கொண்டது.
இந்தியாவுடன் ஒரு முறுகல் நிலையை வளர்த்துக் கொண்டு சீனா சார்பாக நடந்த கொள்கிறது. மின் உற்பத்திக்காக சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ள மூன்று தீவுகளையும் இலங்கை முதலீட்டாளர்களுக்கு வழங்க முடியுமல்லவா? சிறிய முதலீடு அதையும் சீனாவிற்கு வழங்கியுள்ளனர். தேசிய சொத்துகளை பாதுகாப்பதாக கூறியவர்கள் இவ்வாறு சென்றால் கிட்டிய எதிர்காலங்களில் தமது செந்த மனைவிகளைக் கூட சீனாவிற்கு வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

இராணுவ வைத்தியசாலையில் தடுப்பூசி:

# ஏற்க மறுத்த தமிழ் எம்.பிக்கள் இலங்கையர்களே அல்லராம்!

## இராணுவத் தளபதி சொல்கிறார்

கொழும்பு, பெப். 20
இராணுவ வைத்தியசாலைகளில் இருந்து தடுப்பூசிகளைப் பெற தமிழ் எம்.பிக்கள் மறுக்க முடி யாது. உண்மையான இலங்கையர் என்றால் இவ்வாறான அறிக் கையை விடுக்க முடியாது. இலங்கையர் அல்லாதவர்களே இராணுவத்தினர் மீது இவ்வாறான அபிப்பிராயங்களை கொண்டிருக்க முடியும். இது ஜனநாயகத்தை உயர்வாக மதிக்கும் நாடு - இப்படி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இராணுவ வைத்தியசாலைகளில் கொவிட் தடுப்பூசி பெறத் தயாராக இல்லை என்று தமிழ் கட்சிகள் சில தெரிவித்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
மேலும், எம்மிடம் இருப்பது மனிதாபிமான மிக்க இராணுவமாகும். எங்களுக்கு மறைக்க ஏதுவும் இல்லை. நாட்டு மக்கள் தங்களது மனங்களை தட்டிக் கேட்டால் இலங்கை முப்படையினர் எத்தகைய மனிதாபிமான மிக்கவர்கள் என்பது தெரியும். அத்தோடு தனது முதன்மை கடமையான நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு மேலதிகமாக நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பு எத்தகையது என்பதையும் அத்தோடு இவர்கள் கூறிய காரணங்களுடன் நாட்டு மக்கள் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ள வேண்டும்.
இராணுவ வைத்தியசாலைகளில் இருந்து தடுப்பூசிகளைப் பெறுவதை இவர்கள் மறுக்க முடியாது. உண்மையான இலங்கையர் என்றால் இவ்வாறு அறிவிக்க முடியாது. இலங்கையர் அல்லாதவர்களே இராணுவத்தினர் மீது இவ்வாறான அபிப்பிராயங்களை கொண்டிருக்க முடியும். இது ஜனநாயகத்தை உயர்வாக மதிக்கும் நாடு. அத்தகைய நாட்டில் யாரும் தங்கள் விருப்பப்படி எந்த நிலைப்பாட்டையும் எடுக்க முடியும்.
இந்த கொவிட் தடுப்பூசியை இராணுவ வைத்தியசாலைகளில் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு தனிநபராக அல்லது குழுவாக விரும்பவில்லை எனில், அது அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும். அதனூடாக அவர்களின் மனோநிலை மற்றும் நிலைப்பாட்டை தெளிவாக புரிந்துக் கொள்ள முடியும்.
மக்களுடன் நெருங்கி தொழிற்படுபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு புறக்கணிப்பதானது மக்கள் மீதான அக்கறையின் மையையே காட்டுகின்றது - என்றார். (ஐ)

# மகேந்திரனை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

கொழும்பு, பெப். 20
மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அஜான் புஞ்சிஹேவா ஆகியோரை நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அரச சிரேஷ்ட சட்டத்தரணி வசந்த பெரேரா மூவரடங்கிய விசேட நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளார்.
அர்ஜுன மகேந்திரன், பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் இதனை கூறினார்.
நீதிபதிகளான சம்பா ஜானகி ராஜரத்ன, தமித் தொடவத்த மற்றும் நாமல் பலல்லே ஆகியோர் முன்னிலையில் விசேட மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.




## பேஸ்புக் முதல் அமேசன் வரை

# தமிழ் மொழி சார்ந்து வளரும் பொருளாதாரம்

அருண் ராஜேந்திரன்

மொழி சார்ந்த பொருளாதாரம் என்பது குறைவாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு துறை. அதிலும் தமிழ்மொழி சார்ந்த பொருளாதாரம் குறித்த ஆய்வுகளோ, விவாதங்களோ மிக அரிதென்றே குறிப்பிடலாம். மொழியும் பொருளாதாரமும் ஒன்றோடொன்று இணைந்து பயணிக்க வல்லவை.

பொருளாதார முன்னேற்றம் என்பது அதைச் சுற்றியுள்ள மொழியின் வளர்ச்சியையோ, வீழ்ச்சியையோ தீர்மானிக்கும் வல்லமை படைத்தது. அது போல மொழி, பொருளாதாரத்தை முன்னேற்றவோ, முடக்கவோ செய்யும் ஆற்றல் படைத்தது. செம்மொழியான நம் தமிழ் மொழியைச் சார்ந்து ஒரு பொருளாதார கட்டமைப்பை உருவகம் செய்ய வேண்டிய தேவை உள்ளது.

### தமிழ் பேசும் பெரு நிறுவனங்கள்

ஆங்கிலமே வணிகம் செய்ய சிறந்த மொழியாகக் கருதப்பட்டாலும், தேர்ந்த வியாபாரிக்குத் தெரியும், நுகர்வோர் மொழியே வணிகத்தின் சிறந்த மொழி என்று. 2020ஆம் ஆண்டில் மார்வெல் ஸ்ருடியோ நிறுவனம் ஹல்க் உட்பட தனது சுப்பர் ஹீரோக்களை வைத்து பொங்கல் வாழ்த்துகளை தமிழில் ருவீட் செய்திருந்தது.

டைட்டன் கைக்கடிகார நிறுவனம் முதல்முறையாகத் தமிழ்ச் சொற்கள், தமிழ் பாரம்பரியக் கருப்பொருள் ஆகிய வற்றைக் கொண்டு கடிகார வரிசையை அறிமுகம் செய்திருக்கிறது. இதன் காரணம், அந்த நிறுவனத்தின் விற்பனை அதிகரித்தது.

ஸ்ரார் தொலைக்காட்சி குழுமம் (Star Sports) ஆங்கிலம், ஹிந்தியைத் தொடர்ந்து தமிழில் தனிப்பட்ட விளையாட்டு சனலை தொடங்கி வெற்றி கண்டுள்ளது. ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் ஒளிபரப் பில் 90வீதமான தமிழ் மக்கள் ஆங்கிலத் தைவிட தமிழ் ஒளிபரப்பை விரும்பி னர் என்றும் மொத்த பார்வையாளர்கள் எண்ணிக்கையும் அதிகரித்தது எனவும் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

### இணையத்தில் வளரும் தமிழ்

இசை ஒலிபரப்புத்தளங்களான கானா (gaana), ஸ்போட்டிபை (spotify) ஆகியவை தமிழ் பயனர்களை நாடுவது, டிஸ்கவரி சனல் தமிழ் பதிப்பு, நெட் ப்ளிக்ஸ், ஜீ (zee5) போன்ற ஓடிடி (OTT) தளங்கள் தமிழ்ப் பயனர்களுக்கென தனித் திரைத்தொடர்கள் உருவாக்குவது என அடுக்கிக்கொண்டே போகலாம்.

அமேசன் (Amazon India) பெரு நிறுவனம் தன்னுடைய மின்னூல் விற்பனையை அதிகரிக்க கிண்டில் (Kindle pen-to-publish) என்ற சிறந்த மின்னூல்களுக்கான 5 இலட்ச ரூபாய் பரிசுப்பொருள் போட்டியை ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் மட்டுமே நடத்தி வருகிறது. இவை தவிர, விக்கிப்பீடியாவில் (Wikipedia) கட்டுரைகள் பங்களிப்பில் இந்திய மொழிகளில் தமிழ் 58 ஆவது இடத்தில் உள்ளது.

### தமிழுக்கு வர வேண்டிய சேவைகள்

கலிபோர்னியாவில் வசிக்கும் நண்பர் ஒருவர், தன் குழந்தைக்கு தமிழ் மொழி யைப் பயிற்றுவிக்கக் கற்றல் தளங்களைத் தேடியபோது தமிழ் இணையத்தில் அதற் கான வாய்ப்புகள் மிகக் குறைவு, அதுவே ரஷ்ய மொழி இணையம் எவ்வாறு மேலோங்கியுள்ளது எனவும் வருத்தம் தெரிவித்தார். நானே எல்ப் (Yelp) போன்ற மதிப்புரை வலைதளம் தமிழில் இருந்தால் நன்றாக இருக்குமே எனப் பலமுறை நினைத்திருக்கிறேன்.

> “பொருளாதார முன்னேற்றம் என்பது அதைச் சுற்றியுள்ள மொழியின் வளர்ச்சியையோ, வீழ்ச்சியையோ தீர்மானிக்கும் வல்லமை படைத்தது. அதுபோல மொழி, பொருளாதாரத்தை முன்னேற்றவோ, முடக்கவோ செய்யும் ஆற்றல் படைத்தது.”

இவை மட்டுமல்லாமல் வட்ஸ்அப், ஷேர்சாட், பேஸ்புக், கோரா, டிக்ரோல்க் போன்ற முன்னணி தளங்கள் தமிழ் மொழியில் தங்கள் சேவையைக் கொண்டுவந்தது போல விரைவில் ஊபர், ஏர் பிரூபி, அமேசன் போன்ற நிறுவனங்களும் தமிழுக்கும் தகவமைப்பு செய்யும் தேவை உருவாகலாம்.

கூகுளுக்குப் பதில் பைடுவையும் (Baidu), யூ-ரியூப், நெற்ப்ளிக்ஸ் போன்றவற்றுக்கு மாற்றாக யூ கியு (Youkyu) லிஜி (Iqiyi) போன்ற சீனமொழி சார் நிறுவனங்களை உருவாக்கி, அந்த நிறுவனங்களின் பெரும் இலாபங் களையும், கட்டுப் பாட்டையும் தன்னகத்தே வைத்து புதுமை (innovation) சார்ந்த தொழில் சூழலைப் பெருக்கி யது என்பதை ஆய்வு செய்வதும் தமிழ் சார்ந்த பொருளாதாரத்தை முன்னெடுக்க உதவும்.

### வாடிக்கையாளர்களை அடைய மொழிக்கூட்டணி

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் தேடப்படும் சொற்களை நிகழ்நேர மொழிபெயர்ப்பு செய்து தமிழில் தேட வும் பேசவும், வரைபடத்தில் வழிதேட வும் இணையத்தில் வழிமுறை செய்யப் பட்டிருக்கிறது. இந்த சேவைகளை மைக்ரோசொப்ட், கூகுள் ஆகிய நிறுவனங்கள் 2017ஆம் ஆண்டிலிருந்து வழங்குகின்றன.

வெறுமனே மொழிபெயர்ப்பை மட்டுமே வைத்து வாடிக்கையாளர்களை இழுத்துவிட இயலாது. ஆங்கிலம் - தமிழ் மொழி ஜோடிகளை (language-pair) வைத்து கோடிக்கணக்கான வாக்கியங் கள் அமைத்து, அதைத் தானியங்கி முறையில் இயங்க வைப்பதும் பெரும் சவால். தமிழ் நிலப்பரப் பையும், தமிழர் வாழ்வியலையும் புரிந்து தமிழ் மொழி சார் வேலைவாய்ப்பை அதிகரித்தால் தான் பெருவெற்றி சாத்தியம்.

### இணையத்தில் அதிகரிக்கும் தமிழ் சமூகம்

கே.பி.எம்.ஜி நிறுவனமும் கூகுளும் இணைந்து நடத்திய 2017ஆம் ஆண்டின் ஆய்வின்படி, 2021இல் இணையம் 536 மில்லியன் இந்திய மொழிப் பயனாளர் களையும் (தமிழ் - மூன்றாமிடத்தில் 42 மில்லியன்), 199 மில்லியன் ஆங்கில மொழிப் பயனாளர்களையும் கொண்டிருக்கும். அதில், பத்தில் ஒன்பது பேர் தாய்மொழியைப் பயன்படுத்த விரும்பு வர். இவர்கள் தாய் மொழி இணையத்தையே அதிகம் விரும்புகின்றனர்.

தமிழர்கள் தமிழ் மொழிவிளம்பரங் களுக்கே அதி முக்கியத்துவம் அளிப்பார்கள். இந்தப் போக்கு எதைக் குறிக்கிறதென்றால், தமிழ் சார்ந்த நிறுவனங் களுக்கு வியாபாரத்தையும் வருமானத்தையும் தமிழர்கள் அளிக்க தயங்க மாட்டார்கள் என்பதைத்தான். இதன் ஆணிவேர் தாய்மொழிப் பற்று என்பதுடன், தாய்மொழி மூலம் எந்த விஷயத்தையும் எளிதில் புரிந்துகொள்ள முடிவது.

### இனி என்ன செய்ய வேண்டும்?

தமிழின் அடுத்தகட்ட பாய்ச்சலுக்கு தமிழ்மொழி சார்ந்த பொருளாதாரத்தின் தேவையை முன்னெடுப்பது முக்கியம். இதற்கு தமிழ்மொழி சார்ந்த செயலிகள் (apps), கட்டணத்தளங்கள் (payment platforms) போன்ற முயற்சிகளுக்கான ஆத ரவும் பங்களிப்பும் தேவை.

பல துறை சார்ந்து தமிழ் சார்ந்த சமூக வலைதளங் கள், விளையாட்டுச் செயலிகள் (gaming apps), சுற்றுலா, உணவு சார்ந்த மதிப்புரை (review) தளங்கள், தமிழில் பணப்பரிவர்த்தனை, கிராமச் சந்தைகளையும் நகர நுகர்வோர் களையும் நேரடியாய் இணைக்கும் தளங்கள், தமிழர்களின் கற்பனை வளங் களை வணிகப்படுத்தும் சந்தையின் மூலம் பொருளாதாரத் தன்னிறைவு என்று எல்லாருக்கும் குறைந்தபட்ச சம வாய்ப்பையும் உருவாக்குவதன் மூலம் மொழியை முன்னேற்றத்துக்கான தடைக்கல்லாய் பார்க்காமல், ஒரு கருவியாய் பயன்படுத்தலாம்.

நெல்சன் மண்டேலா கூறியது போல, “ஒரு மனிதனிடம் அவனுக்குப் புரியும் மொழியில் பேசினால் அவன் தலைக்குப் போகும், அவன் சொந்த மொழியில் பேசினால், அவன் இதயத்துக்குப் போகும்!”



# வட இலங்கையில் சீன செல்வாக்கு
# இந்திய இராஜதந்திரத்திற்கு மீண்டும் ஒரு தோல்வி

**பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்**

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பிராந்திய ரீதியில் SAGAR (Security and growth for all in the Region) எனும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கம் முன்வைத்து செயல்பட்டது. இதில் தெற்காசிய நாடுகளுடனான உறவு இந்தியாவின் பாதுகாப்பை பொறுத்து முதலிடம் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியது. ஆனால், தெற்காசியப் பிராந்திய நாடுகள் சீனாவுடனான நட்புறவைப் பலப்படுத்தியதுடன் இந்தியாவின் சகார் திட்டத்திற்கு முன்னும் பின்னும் சீன நட்பைப் பலப்படுத்திக் கொண்டுள்ளதை அவதானிக்கும் போது இந்தியாவின் பிராந்திய ரீதியான இராஜதந்திரம் தொடர் தோல்வியாகவே பதிவாகி வருகிறது.

இந்தியா பிராந்திய நாடுகளை கையாளுவதென்பது சீனாவையும் கையாளுவதாகவே தெரிகிறது. இதில் இலங்கையில் இந்தியாவுக்கு ஏற்பட்டுவரும் நெருக்கடியானது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஒரே வாய்ப்பாக இருந்த தென்பகுதியும் சீனாவின்அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஏறக்குறைய சீனாவின் உபாயங்களால் இந்தியா முழுமையாக சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் இரண்டு பிரதான விடயங்கள் இலங்கையில் இந்தியாவின் நலனைப் பாதிப்பதாக நிகழ்ந்துள்ளன. 2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிகமான விடயங்களில் இந்திய அரசியல் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறை காணப்பட்டது. அப்போதெல்லாம் இந்தியா, இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதும் அதன் நலன்களை பாதுகாப்பதுமாகவே செயல்பட்டதே அன்றி இலங்கையின் நலன்களுக்கு விரோதமாக செயல்படவில்லை என்றே கூறலாம்.

இலங்கைத் தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களையும் அடக்குமுறைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் போதெல்லாம் இந்தியா மௌனம் சாதித்தது அல்லது இலங்கை அரசாங்கத்தை சர்வதேச பொறிமுறைகளுக்கு முன் பாதுகாத்தே வந்துள்ளது. இதனையெல்லாம் இராஜதந்திர செய்முறைக்குள் முன்னிறுத்திக் கொண்டு இலங்கை அரசாங்கமும் ஆட்சியாளர்களும் இந்தியாவையும் உலகத்தையும் கையாளும் திறனை வளர்த்துக் கொண்டனர். இதனை எல்லாம் தமக்கு சாதகமென கருதிய இந்தியா இலங்கையை திருப்திப்படுத்தும் செய்முறையில் ஈடுபட்டு வந்தது. அதன் விளைவுகளையே தற்போது எதிர்கொண்டுவருகிறதை அவதானிக்க முடிகிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் இலங்கையின் நடவடிக்கை இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட சவாலாகவே தெரிகிறது. கொவிட்-19இற்குரிய தடுப்பு மருந்தை வழங்கிய பின்பும் கிழக்கு முனையத்திற்கான உடன்படிக்கையை இலங்கை இரத்து செய்துள்ளமை கவனிக்க வேண்டிய விடயமாகும். அவ்வாறே இலங்கை மத்திய வங்கி இந்தியா வழங்கிய சலுகைக்கடனை மீளவழங்கியமை அதேநேரம் சீனாவிடமிருந்து மேலும், அதிக கடனைப் பெற்றுக் கொண்டமை அனைத்தும் இந்தியாவின் இராஜதந்திர தோல்வியாகவே மதிப்பிடப்படுகிறது.

அடுத்தது, இந்தியாவின் எல்லையிலிருந்து 45 மைல் தூரத்தில் அமைந்துள்ள இலங்கையின் வடபகுதியிலுள்ள தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு என்பவற்றை சீனாவின் காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தி மேற்கோள்ளும் சினோசர் - இடெக்வின் (Sinosar-Etechwin) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளமை முக்கிய அரசியல் பதிவாக உள்ளது. காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிக்கும் திட்டம் 87.60 கோடி ரூபா செலவில் மேற்கொள்ள சீன நிறுவனமும் இலங்கை மின்சார சபையும் ஒப்பமிடடுள்ளன. கடந்த 17.01.2021 இல் அமைச்சரவையில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது. இத்தகைய கலப்பு மின் திட்டமானது இப்பிரதேச அபிவிருத்தியை இலக்கு வைத்துள்ளதாகவும் அதனூடாக உல்லாசப்பயணத் துறையை வளர்க்க திட்டமிடுவதாகவும் தெரியவருகிறது.

மேற்குறித்த இரண்டு விடயங்களிலும் இந்திய தரப்பு இலங்கை அரசாங்கத்திற்கு தனது ஆட்சேபனையை தெரிவித்தமை தெரியவருகிறது. குறிப்பாக கிழக்கு முனையத்தை மூன்று நாடுகளும் மேற்கொண்ட உடன்படிக்கையை உறுதி செய்யுமாறு கோரியுள்ளது. அவ்வாறே வட பகுதியில் அமைந்துள்ள தீவுகளை சீன நிறுவனத்துக்கு வழங்கியமை இந்தியாவின் தேசிய பாதுகாப்புடன் நேரடியாகத் தொடர்புபட்டதென்றும் புதுடில்லி தெரிவித்துள்ளது. அது மட்டுமன்றி இத்தகைய திட்டம் ஒன்றுக்கான ஒத்துழைப்பைக் கோரியிருந்தால் இந்தியா முழுமையாக ஆதரித்திருக்கும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இதனைக் கடந்து இந்தியா எதனையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. ஆனால், அண்மையில் வடக்கு, கிழக்கு தழுவிய நடைபயணப் போராட்டம் இந்தியாவின் அனுசரணையுடன் நிகழ்ந்ததாகவும் முள்ளிவாய்க்கால் தூபியின் மீள் உருவாக்கத்திற்கான நகர்வுகளில் இந்தியா இருப்பதாகவும் ஊகங்கள்




நிலவுகின்றன. இதனை உறுதிப்படுத்தும் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை என்றே தெரிகிறது. ஆனாலும், அவற்றுக்கான வாய்ப்புக்கள் இல்லாமலில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி இராஜ்ய சபாவில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உரையாற்றும் போது தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவுசெய்வதே இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டுப் பொறிமுறைக்கு சாதகமானது எனத் தெரிவித்திருந்தார். இவற்றைக் கடந்து இலங்கை விடயத்தில் இந்தியா பெரும் நகர்வுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

இந்தியாவை பொறுத்தவரை இலங்கை சீன நெருக்கம் தனது நலனுக்கு ஆபத்தானது என கருதுகிறது. அதனை தகர்ப்பதற்கான முனைப்புகளை ஏற்படுத்த முனைகிறது. அதன் பிரகாரமே வட மாகாணத்தில் சீனாவுக்கு வழங்கிய தீவுகளை இந்தியா தனது நலனுக்கு ஆபத்தானது எனக் கருதுகிறது. குறிப்பாக, இந்தியாவின் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு பகுதி அனைத்துமே இந்தியாவுக்கு ஆபத்தான பகுதிகளாகும். பிரிட்டிஷ் - இந்தியாவின் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தையும் சுதந்திர இந்தியா பறிகொடுத்துள்ளது. மிஞ்சியிருந்த தென்பகுதியையும் தற்போது முழுமையாக இந்தியா இழந்துள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கான எல்லையாகக் காணப்படும் இலங்கை இந்தியாவுக்கு எதிரான சக்திகளிடம் சென்றுவிடும் என்பதற்காகவே உருவானதே இலங்கை - இந்திய உடன்படிக்கை. அப்போது அமெரிக்காவிடம் சென்றுவிடும் என்ற அச்சம் இந்திய ஆளும் வர்க்கத்திடம் காணப்பட்டது. ஆனால், தற்போது அதற்கான சூழல் ஒன்றுக்கான வாய்ப்பு தென்படுவதாகவோ அல்லது இலங்கை - இந்திய உடன்படிக்கையை மீள உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்போ தென்படுவதாகத் தெரியவில்லை.

மாறாக கண்டனத்தையும் எச்சரிக்கையையும் மட்டுமே இந்திய தரப்பு தனது இராஜதந்திர நகர்வாகக் கருதுகிறது. அல்லது இலங்கைத் தமிழரை மீளவும் அகிம்சை வழியாக பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி நகர்த்துவதாகத் தெரிகிறது. இவை அனைத்துமே தோல்விகரமான அணுகுமுறைகளாகவே அமைந்துள்ளன. அமெரிக்கா திருகோணமலையைத் தான் அப்போது இலக்கு வைத்திருந்தது. சீனா இந்தியாவுக்கு அருகிலுள்ள தீவுகளை இலக்கு வைத்துள்ளது. ஏறக்குறைய இந்தியாவின் வாசலை சீனா எட்டிவிட்டது எனலாம்.

இதன் மூலம் முழுமையான தெற்காசியப் பிராந்தியம் சீனாவின் கைகளுக்குள் சிக்கியுள்ளது. ஏற்கனவே பாகிஸ்தானின் துறைமுகமான குவாடரையும் அதன் வழியாக கொரகராம் நெடுஞ்சாலையையும் இணைத்துள்ள சீனா அண்மையில் லடாக் பகுதியையும் தனது செல்வாக்குக்குள் கொண்டு வந்துள்ளது. இது பாகிஸ்தான் - இந்திய எல்லையூடாக நகர்ந்து சீனாவின் எல்லைக்குள் நுழைகிறது. அவ்வாறே கடல்வழியாக மாலைதீவையும் இலங்கையையும் பங்களாதேஷ் துறைமுகமான சிட்டங்கொங்கையும் மியான்மாரின் தீவுகளான சிற்வே உள்ளடங்கலாக சடல்கி கோக்கோஸ் போன்ற தீவுகளையும் மலாக்கா நீரிணை வரையும் நகர்கிறது.

இதனை விட நேபாளம் மற்றும் பூட்டானுடன் எல்லையை அடிப்படையாகக் கொண்டும் பொருளாதார ஒத்துழைப்பினை மையமாகக் கொண்டும் நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் ஆரம்பமான சீன இலங்கை நெருக்கம் தற்போது கொழும்பு துறைமுகத்தையும் வடக்கு பகுதியிலுள்ள அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு வரையும் விரிவடைந்துள்ளது.

இதனைவிட சீனா நுரைச்சோலை அனல்மின் நிலையம் உட்பட பல பொருளாதார வலயங்களையும் கலாசார மற்றும் மருத்துவ நிலையங்களையும் அமைத்து இலங்கையின் அபிவிருத்திக்கு பங்காற்றுகிறது குறிப்பிடத்தக்கதாகும். இவை அனைத்தும் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு மாற்றீடான ஒரு நட்பு நாடாக சீனா மாறியிருப்பதைக் காட்டுகிறது. அதனால் சீனாவின் அணுகுமுறைகள் இந்தியாவுக்கு எதிரானதாகவும் அதன் நலன்களை முற்றாகவே சிதைப்பதாகவும் அமைந்துள்ளது.

ஏறக்குறைய இந்தியாவை சுற்றிவளைத்துள்ள சீனாவின் நகர்வு பொருளாதார ரீதியிலும் மென் அதிகாரத் தளத்திலுமே காணப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவின் பலம் படிப்படியாக மட்டுப்படுத்தப்படுவதையும் அதன் செல்வாக்குக்குள் தெற்காசியா இல்லாது போவதையும் காணமுடிகிறது. இந்து சமுத்திரத்தின் மையப்பகுதியே தெற்காசியா என்ற நிலையில் சீனா இந்து சமுத்திரத்தை முழுமையாக தனது செல்வாக்குப் பிராந்தியமாக மாற்றி வருகிறது. இந்தோ - பசுபிக் உபாயம் கூட அத்தகைய சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொண்டு வெற்றி கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளது. இந்தோ - பசுபிக் உபாயத்தின் இரு பிரதான நாடுகளான இந்தியாவையும் ஜப்பானையும் இலங்கை கிழக்கு முனையத்தில் நிராகரித்துள்ளது. 2019 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை தன்னிச்சையாக முறித்துக்கொண்டமை ஏறக்குறைய இந்தோ - பசுபிக் உபாயத்தின் தோல்வியாகவே தெரிகிறது.

எனவே, இந்தியா கடந்த காலத்தில் இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் மேற்கொண்டு வந்த இராஜதந்திர அணுகுமுறைகள் அனைத்துமே தோல்வியை நோக்கியுள்ளது. தெற்காசிய நாடுகள் அனைத்துமே இந்தியாவின் நெருக்கமான நட்புறலிருந்து விலகியுள்ளன. அதிலும் இலங்கை முழுமையாக விலகியுள்ளமை இந்தியாவின் இருப்பை பெரியளவில் பாதிப்பதாகவே தெரிகிறது. இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள், அரசியல் தலைமையிலுள்ளவர்கள், புலனாய்வுத் துறையினருக்கு ஆலோசனை வழங்குபவர்கள் மற்றும் புலமையாளர்கள் என்பவர்கள் இதனைக் கண்டுகொள்வார்களா என்பது பிரதான கேள்வியாகும். அவர்கள் அனைவரும் தெற்காசிய நாடுகளில் சீனாவுக்கு போட்டியாகச் செயல்படுகின்றார்களே அன்றி சரியானதை மேற்கொள்ள தயாராவதாகத் தெரியவில்லை. இதன் விளைவே தென் இலங்கை மட்டுமல்ல தற்போது வட இலங்கையிலும் சீனாவின் செல்வாக்கு வலயத்திற்குள் அகப்பட ஆரம்பித்துள்ளது.

# தொற்றாளர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும்

## ஹரித அளுத்கே எச்சரிக்கை

கொழும்பு,பெப்.20

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலகளாவிய ரீதியில் நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், இலங்கையில் அதற்கு எதிர்மாறாக தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அத்தோடு மரணங்களின் எண்ணிக்கையும் உயர்ந்து செல்கிறது. எனவே மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கொரோனா தடுப்பூசி வழங்கும் செயல்பாடுகள் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கல் என்பவற்றின் மூலம் மே மாதத்திலாவது தொற்றாளர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும்.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதில் ஏற்படும் கால தாமதமே கொழும்புக்கு வெளியில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமைக்கு பிரதான காரணமாகும்.

எனவே தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதைத் துரிதப்படுத்த வேண்டும். அவ்வாறில்லை என்றால் அழைத்துச் செல்லும் வரை அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆலோசனை வழங்க வேண்டும்.

மேல் மாகாணத்தில் கடந்த சில வாரங்களாக கொரோனா பரவல் அபாயமானது 40 வீதமாகக் குறைவடைந்திருந்த போதிலும், கடந்த சில தினங்களில் 60 வீதம் வரை அபாய நிலை உயர்வடைந்துள்ளது.

எனவே, மேல் மாகாணம் தொடர்பில் ஆரம்பத்தைப் போன்றே உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இரத்தினபுரி, கண்டி, கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களிலும் தற்போது அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.



நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கை 900 வரை அதிகரித்த போது மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்று நாம் ஆரம்பத்திலேயே எச்சரிக்கை விடுத்தோம்.

எனவே, இதுதொடர்பில் மதிப்பீடு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினோம். ஆனால், அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. 60 வயதுக்குக் குறைந்தவர்களின் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்நிலையில், இங்கிலாந்தில் இனங்காணப்பட்டுள்ள உருமாறிய புதிய வகை வைரஸானது நாம் எதிர்பார்ப்பதை விடவும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அந்நாட்டு சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இலங்கையில் அதனால் பெரும் பாதிப்புக்கள் எவையும் ஏற்படாது என்று கவனவீனமாக இருந்தால் தற்போதுள்ளதை விட மோசமான நிலைக்குச் செல்லக் கூடும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கொரோனா தொற்றினால் 20 வயது யுவதி மரணம்

பதுளை,பெப்.20

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில், பதுளை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த 20 வயது யுவதியொருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.**

பதுளை - ரிதிமாலியத்தை ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி வந்த இந்த யுவதிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், காகொல்லை கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு இவருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (எ)

# அரசியல் பழிவாங்கல்; விசாரணை அறிக்கை இம்மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்


## என்கிறார் அமைச்சர் காமினி லொகுகே

கொழும்பு,பெப்.20

எதிர்க்கட்சியினரை பழிவாங்கும் வகையில் அரசாங்கம் செயல்படவில்லை. சட்டத்துக்கு முரணாகச் செயல்பட்டவர்கள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும். இவ்விடயத்தில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பாகுபாடு கிடையாது. அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இம்மாதத்துக்குள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:



நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் அங்கம்வகித்து அரச அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்திய தன் பயனை தற்போது அனுபவிக்கிறார்கள். முறையான விசாரணைகளுக்கு அமையவே சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்தரப்பினருக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட முடியாது.

முன்னாள் ஜனாதிபதியான தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் நல்லாட்சியில் அரசியல் பழிவாங்க லுக்குட்படுத்தப்பட்டன. ராஜபக்ஷக்கள் என்ற பெயருடன் தொடர்புடையவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பலர் சிறையிலடைக்கப்பட்டனர்.

யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தை கொண்டு அரசாங்கத்தை பழிவாங்கும் நோக்கில் நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவா விவகாரத்தை கையாண்டது. இதனால் புலனாய்வு அதிகாரிகள், இராணுவத்தினர் எனப் பலர் பாதிக்கப்பட்டனர். கடந்த அரசாங்கத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை அமைத்தார். அதனை அடிப்படையாகவே அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

அரச அதிகாரத்தைக் கொண்டு எதிர்த்தரப்பினரை பழிவாங்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. கடந்த அரசாங்கம் செய்த தவறை தற்போதைய அரசாங்கம் தொடராது. அரசியல் பழிவாங்கல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை இம்மாதத்துக்குள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (எ)

# வீதி விபத்துக்களில் சிக்கிய 15 பேர் ஒரேநாளில் மரணம்

கொழும்பு,பெப்.20

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு வீதி விபத்துக்களால் ஒரே நாளில் 15 பேர் உயிரிழந்தனர்.

இதில் எட்டு சாரதிகளும், ஏழு பாதசாரிகளுமே இவ்வாறு உயிரிழந்தனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் எட்டுப் பேர் உயிரிழந்தனர். அதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஏழு பேருமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

எனவே, வாகனம் செலுத்தும் போது சாரதிகள் அவதானத்துடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்பதுடன், பாதுகாப்பு வழிகாட்டல்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்து விதிமுறைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தினார்.

பொறுப்பற்று வாகனம் செலுத்துவதால் ஏற்படும் வீதி விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக புள்ளி முறையை மீண்டும் அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படு வதாகவும் அவர் கூறினார். (எ)

# இலங்கைக்குள் அத்துமீறி நுழைந்த நான்கு பிரான்ஸ் பிரஜைகள் கைது

கொழும்பு,பெப்.20

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் நான்கு பிரான்ஸ் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டனர்.

ஒரு கப்டனும், ஆண்கள் இருவரும், பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த நால்வரும் ஏழு நாள்களுக்கு முன்னர் பிரான்ஸிலிருந்து கப்பல் மூலம் புறப்பட்டனர், கப்பலில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையால் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தை நோக்கி கப்பலை செலுத்தியுள்ளனர்.

இதன்போதே அவர்கள் மிரிஸ்ஸ கடலோர காவல் படையினரால் கைதுசெய்யப்பட்டதுடன், மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (எ)



# இலங்கை விவகாரங்களில் தலையிட்டால் ஐ.நா.மனித உரிமை பேரவை பிளவுபடும்

## அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை



கொழும்பு,பெப்.20

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகப் பிரித்தானியா, கனடா, ஜெர்மனி, மொன்டர்கிரினோ மற்றும் மெஸடோனியா ஆகிய 5 நாடுகள் புதிய பிரேரணையைக் கொண்டு வரவுள்ளதாக அறியமுடிகின்றது. இலங்கையின் உள்ளக விவகாரங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தேவையில்லாமல் தலையிட்டால் அந்தப் பேரவை இரண்டாகப் பிளவுபடும். இதனை பெரும் பாலான நாடுகள் விரும்பவில்லை. ஆகவே, இலங்கையின் உள்ளக விவகாரத்தில் தலையிடுவதை மேற்குலக நாடுகளும், மனித உரிமைகள் பேரவையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தருஸ்மன் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. தருஸ்மன் அறிக்கை பொய்யான காரணிகளை உள்ளடக்கியுள்ளது என்பதை சர்வதேச யுத்த விஷேட நிபுணர்கள் ஆதார பூர்வமாக அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கும்.

ஜெனிவா விவகாரத்தில் இலங்கை பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்குவதாக அரசாங்கம் குறிப்பிட்டதால் அக்காலத்தில் இலங்கைக்கு ஆதரவாக மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் ஏதும் செயல்படவில்லை.

நாட்டுக்கு எதிரான பிரேரணைகளில் இருந்து அரசாங்கம் விலகும் என்ற வாக்குறுதியை நாட்டு மக்களுக்கு வழங்கியிருந்தோம். இதற்கமைய கடந்த வருடம் இடம் பெற்ற மனித உரிமை பேரவையில் 30-1 பிரேரணையிலிருந்து அரசாங்கம் விலகிக்கொண்டது. இதன் பின்னரே மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு எதிராக அதிக அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பூகோள மட்டத்தில் தாக்கம் ஏற்பட்டுள்ள இந்நிலையில் ஒரு நாட்டை சர்வதேச அரங்கில் நெருக்கடிக்குள்ளாக்குவது பொருத்தமற்ற செயல்பாடாகும். இம்முறை இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் பெரும்பாலான பலம் கொண்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயல்படும். பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மொன்டர்கிரினோ, மெஸடோனியா ஆகிய 5 நாடுகளும் ஒன்றிணைந்து இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணையை கொண்டு வரவுள்ளதாக அறியமுடிகிறது.

இந்நாடுகள் இலங்கைக்கு எதிராக பிரேரணையினை கொண்டு வந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இரண்டாகப் பிளவுபடும். இதனை பெரும்பாலான நாடுகள் விரும்பவில்லை. ஆகவே, இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதை சர்வதேச நாடுகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். நாடு என்ற ரீதியில் அனைத்துத் தரப்பினருடனும் இணக்கமாகவே செயல்படுவோம்- என்றார். (எ)



# கொள்ளை குற்றச்சாட்டில் யாழில் ஐவர் கைதாகினர்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்ப்பாணம் மாநகரில் மூன்று இடங்களில் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்ட ஐவர் கைது செய்யப்பட்டனர் என மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 8 பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புத் துறையிலுள்ள வீடொன்றுக்குள் அண்மையில் நுழைந்த மூவரடங்கிய கும்பல், அங்கு வசித்த வயோதிபர்களை மிரட்டி 8 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டது.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணம் மருதடி ஒழுங்கையில் பூட்டியிருந்த வீட்டில் இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டுப் போயிருந்தன. அத்துடன் அண்மையில் இரவுவேளை அரியாலை துண்டியில் இரு கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இவை தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தடயங்களின் அடிப்படையில் பாசையூர், குருநகர் மற்றும் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் 23 தொடக்கம் 40 வயதுக்கிடைப்பட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரிடமும் நகை மற்றும் பொருள்களை வாங்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 8 பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டன.

சந்தேக நபர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர். (எ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 16 பேர் கைது

கொழும்பு,பெப்.20

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 180 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச் சாட்டில் நேற்று மேலும் 16 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இது வரையான காலப் பகுதியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 3 ஆயிரத்து 180 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார். (எ)

# சட்டமா அதிபர் திணைக்களத்தில் 425 பேருக்கு கொரோனா தடுப்பூசி

கொழும்பு,பெப்.20

அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்கள் உட்பட சட்டமா அதிபர் திணைக்களத்தின் 425 பேர் இதுவரை ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனேகா கோவிஷீல்ட் தடுப்பூசி அளவைப் பெற்றுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சட்டமா அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பாளரும், சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசியை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் வார இறுதி நாள்களில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

30 வயதுக்கும், 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளமுடியும். தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு தற்சமயம் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ, கொத்தட்டுவ, மொரட்டுவ, எகொடைஉயன, ஹங்வெல்ல ஆகிய இடங்களில் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா, அத்தனகல்ல, நீர்கொழும்பு, சீதுவ, மஹர, பியகம, வத்தளை, மீரிகம, ராகம, மினுவாங்கொடை, ஜாஎல, களனி, கட்டான, திவுலபிட்டி, தொம்பே ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளலாம். களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த, பண்டாரகமை, பாணந்துறை, ஹொரணை, மத்துகமை ஆகிய பகுதிகளில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. (எ)

# மேல் மாகாணத்தில் சலுகை விலையில் காய்கறிகளை விற்கும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு,பெப்.20

நுகர்வோருக்கு சலுகை விலையில் உணவுப் பொருள்களை வழங்கும் திட்டத்தின் முதல் கட்டம் மேல் மாகாணத்திலுள்ள 75 லங்கா சதொச விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 26 இடங்களிலும், கம்பஹா மாவட்டத்தில் 41 இடங்களிலும், களுத்துறை மாவட்டத்தில் 8 இடங்களிலும் காய்கறிகள் நுகர்வோருக்கு சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத்திட்டத்தை, எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# 130 நாடுகளுக்கு ஒரு டோஸ் தடுப்பூசிகூட கிடைக்கவில்லை

## இது நியாயமே அற்றது என்கிறது ஐ.நா.

நியூயோர்க், பெப். 20

சுமார் 75 வீதமான கொரோனா தடுப்பு மருந்துகள் வெறும் 10 நாடுகளுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளன. இது நியாயமற்றது என்று ஐக்கிய நாடுகள் சபை விமர்சித்துள்ளது.

ஐ.நா. சபையின் பொதுச் செயலர் அன்ரனியோ குட்ரெரஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இதன்போது அன்ரனியோ குட்ரெரஸ் கூறுகையில், "சுமார் 130 நாடுகள் ஒரு டோஸ் கொரோனா தடுப்பு மருந்தைக் கூடப் பெறவில்லை. வெறும் 10 நாடுகளுக்கு சுமார் 75வீதமான கொரோனா



தடுப்பு மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது நியாயமற்றது. அனைத்து நாடுகளுக்கும் கொரோனா தடுப்பு மருந்துகள் சென்றடைய வேண்டும்" என்று தெரிவித்தார்.

இதேவேளை, பிரிட்டனில் பரவத் தொடங்கிய உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ், ஜேர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் பரவி வருகிறது. இதனை தொடர்ந்து உலக நாடுகள் கொரோனா மருத்துவப் பரிசோதனைகளை தீவிரப்படுத்தியுள்ளன. சமூக விலகலை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு சார்பாக தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

ஸ்புட்னிக், மொடர்னா, பைசர் ஆகிய கொரோனா தடுப்பு மருந்துகள் புதிய வகை கரோனா வைரஸுக்கு எதிராகப் பயன் அளிக்கின்றன என்று மருந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)



செவ்வாய் தரையில் தரை இறங்கிய ரோவரும் அது பூமிக்கு அனுப்பிய ஒளிப்படமும்

# 'விடாமுயற்சி' ரோபோ ஹெலி செவ்வாயில் தரையிறங்கியது!

கலிபோர்னியா, பெப். 20

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பிய "விடாமுயற்சி" (Perseverance) என்ற ரோவர் விண்கலம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது.

செவ்வாய் தரையில் களமிறங்கிய இரண்டாவது ரோவர் இதுவாகும். இந்த சிறிய ரோவர் கலத்துடன் முதன்முதலாக சிறிய ரக ஹெலிகொப்டர் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் இணைந்து செவ்வாய் கிரகத்தில் உயர் வாழ்க்கை தொடர்பில் ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜெசெரோ என்றழைக்கப்படும் செவ்வாயின் மத்திய கோட்டு பகுதிக்கு அருகில் ஆழமான பள்ளத்திலேயே இந்த ரோவர் வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டது.

ரோவர் களமிறங்கிய பகுதயில் நூறு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய ஏரி ஒன்று இருந்தது என்றும் அதில் தண்ணீர் இருந்தது எனவும் கருதப்படுகின்றது.

இதேவேளை, தரையிறங்கிய ரோவர் உடனடியாகவே இரண்டு படங்களை கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பியுள்ளது. அது தொடர்ந்தும் படங்களை அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)



# பயங்கரவாத தாக்குதல்களால் 30 இலட்சம் சிறார் ஆபத்தில்

## கொங்கோ குடியரசில் இந்த நிலை!

நியூயோர்க், பெப். 20

கொங்கோ ஜனநாயக குடியரசு நாட்டில் 30 இலட்சம் சிறுவர்களின் எதிர்காலம் பயங்கரவாத வன்முறை தாக்குதல்களால் ஆபத்தில் உள்ளது யுனிசெவ் அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் கடந்த 3 ஆண்டுகளாக பயங்கரவாத குழுக்கள் உள்ளூர் மக்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதனால், கிராமங்களில் வசிக்கும் சமூக மக்கள் அனைவரும் பாதுகாப்புக்காக வேறு இடங்களுக்கு தப்பியோடி நெருக்கடியான இடங்களில் வசித்து வருகின்றனர். சிலர், நீர், உணவு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளற்ற பகுதிகளில் குழந்தைகளுடன் வசிக்கின்றனர்.

பயங்கரவாதிகளிடம் சிக்கும் மக்கள் கொல்லப்படும் சூழல் உள்ளது. முழு குடும்பத்தினரையும் பயங்கரவாத குழுக்கள் கொல்கின்றன. அத்துடன் பள்ளி கூடங்கள், மருத்துவமனைகளையும் அழித்து விடுகின்றன. கிராமங்களையும் தீ வைத்து கொளுத்தி விடுகின்றன.

இதுபற்றி யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ள புதிய அறிக்கை ஒன்றில், கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் நிலவரப்படி, கொங்கோ ஜனநாயக குடியரசு நாட்டில் 50 லட்சம் பேர் உள்நாட்டிலேயே புலம் பெயர்ந்து உள்ளனர்.

இவற்றில் வடக்கு மற்றும் தெற்கு கிவு பகுதி, இதுரி மற்றும் தங்கனிக்கா ஆகிய 4 கிழக்கு மாகாணங்கள் அதிகம் பாதிப்படைந்துள்ளன. இவர்களில் 30 லட்சம் பேர் சிறுவர்களாவர். இவர்களில் 5 லட்சம் சிறுவர்கள் 5 வயதுக்கு உட்பட்டவர்களாவர் என தெரிவித்துள்ளது.

நில விவகாரங்கள், ஆயுதங்கள் கிடைப்பது மற்றும் பலவீனமான அரசாங்கம் ஆகியவை வன்முறைக்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன. (ஐ)

## இஸ்லாமிய அடிப்படைவாதம்:

# பிரான்ஸில் சர்ச்சைக்குரிய சட்டம் நிறைவேறியது!

பாரிஸ், பெப். 20

பிரான்ஸில் இஸ்லாமிய மத அடிப்படைவாதம் தலைதூக்குவதைத் தடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை அந்த நாட்டு பாராளுமன்றம் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது.

இதுகுறித்து அசோசியேடட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

இஸ்லாமிய அடிப்படைவாதத்திடமிருந்து பிரான்ஸைப் பாதுகாக்கும் நோக்கில் வரையப்பட்ட 18ஆவது சட்ட திருத்தத்தை ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் தலைமையிலான அரசு, அந்த நாட்டு பாராளுமன்றக் கீழவையில் செவ்வாய்க்கிழமை கொண்டு வந்தது.

இந்த சட்ட திருத்தத்துக்கு ஆதரவாக 347 எம்.பி.க்களும் எதிராக 151 எம்.பி.க்களும் வாக்களித்தனர். 65 பேர் வாக்களிப்பைப் புறக்கணித்தனர். இதையடுத்து, சர்சைக்குரிய அந்த சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வருகிறது.

மசூதிகள், பள்ளிகள், விளையாட்டு சங்கங்களில் கண்காணிப்பை பலப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அடங்கிய இந்த சட்ட திருத்தத்தின்மீது நீண்ட காலமாக விவாதங்கள் நடைபெற்று வந்தன.

இது, பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் ஒட்டுமொத்த இஸ்லாம் மதத்துக்கு எதிரான அச்சம் உருவாக்கப்படுவதாகவும் சில எம்.பி.க்களும் மனித உரிமை ஆர்வலர்களும் விமர்சித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஒரு மனிதர் மருத்துவமனை படுக்கையில் படுத்திருப்பது போன்ற வடிவில் தயாரிக்கப்பட்டகேக்கின் படங்கள் காண்போதை ஆச்சரியத்தில் ஆழத்துகின்றன.

பிரிட்டனை சேர்ந்த கேக் பேக்கர் பென் கல்லன் என்பவர் இந்த மனித வடிவிலான கேக்கை தத்ரூபமாக வடிவமைத்துள்ளார். சமையல் கலை மற்றும் கேக் தயாரிப்பில் பல்வேறு புதுமைகளை புகுத்தி வரும் இவர், இந்த கேக்கை நிறம் கூட மாறாமல் அச்சுபிசராமல் வடிவமைத்து சமூக வலைத்தளங்களில் பாராட்டை பெற்று வருகிறார்.

# பாரிஸில் மறைவிடத்தில் பெருமளவு தங்கம் மீட்பு!

## தமிழர் ஒருவர் கைது!!

பாரிஸ், பெப். 17

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மறைவிடம் ஒன்றில் இருந்து பெருமளவு தங்கம், பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருள்களை பொலிஸ் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். பிரான்ஸின் சில ஊடகங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

கைதானவர் இலங்கைத் தமிழரா அல்லது இந்தியத் தமிழரா என்பது உடனடியாக உறுதிப்படுத்தப்படவில்லை.

பாரிஸ் ஊடகங்கள் அவரை ஓர் இலங்கைத் தமிழர் என்று குறிப்பிட்டிருக்கின்றன. சில சுயாதீன வட்டாரங்கள் அவர் ஓர் இந்தியத் தமிழர் என்று கூறியுள்ளன.

புகைப்படத் தொழில் நிலையம் ஒன்றின் உள்ளேயே மறைவிடத்தில் தங்க நாணயங்கள், ஆபரணங்கள், வைரக்கற்கள், கடிகாரங்கள் மற்றும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் யூரோ பணம் என்பன ஒளித்து வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர் என்று கூறப்படுகிறது. அத்துடன் தங்கத்தை உருக்குவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

அந்த நிலையத்தின் உரிமையாளரான 55 வயதுடைய இலங்கைத் தமிழர் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார் எனச் செய்திகளில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பத்து நாட்களுக்கு முன்னரும் அதே நபரின் மற்றொரு வர்த்தக நிலையம் ஒன்றின் கீழ் தளத்தில் இருந்து புடவைகள் மற்றும் பொருள்கள் கைப்பற்றப்பட்டிருந்தன என்றும் ஊடக செய்திகள் கூறுகின்றன.

கைதுசெய்யப்பட்டவர் நிதி ஆய்வு மற்றும் விசாரணையுடன் தொடர்புடைய படைப்பிரிவினரால் (Financial Research and Investigations Brigade) விசாரிக்கப்பட்டு வருகிறார் என்று கூறப்பட்டது. (ஐ)



# ஐ.பி.எல். ஏலம் ஒரே பார்வையில்!

சென்னை, பெப். 20

ஐ.பி.எல். இருபது -20 தொடரின் சிறு ஏலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்னையில் இடம்பெற்றது.

இதில், சகல ஐ.பி.எல். அணிகளும் ஏலத்தில் எடுத்த வீரர்கள் அவர்களின் விவரங்கள் வருமாறு: (வீரர்களின் விலை இந்திய ரூபாவில்)

### சென்னை சுப்பர் கிங்ஸ்

கிருஷ்ணப்பா கௌதம் - சகலதுறை வீரர்- ரூ. 9.25 கோடி, மொயீன் அலி - சகலதுறை வீரர்- ரூ.7 கோடி, சேதேஷ்வர் புஜாரா - துடுப்பாட்ட வீரர் - ரூ.50 இலட்சம், கே.பகத் வர்மா - சகலதுறை வீரர் - ரூ.20 இலட்சம், சி.ஹரி நிஷாந்த் - துடுப்பாட்ட வீரர் - ரூ.20 இலட்சம், எம்.ஹரிசங்கர் ரெட்டி -பந்துவீச்சாளர் - ரூ.20 இலட்சம்

கையிருப்பு: ரூ. 2.55 கோடி

### டில்லி கப்பிட்டல்ஸ்

ரொம் கரன் - சகலதுறை வீரர் ரூ.5.25 கோடி, ஸ்ரீபன் ஸ்மித் - துடுப்பாட்ட வீரர் - ரூ.2.20 கோடி, சாம் பில்லிங்ஸ் - விக்கெட் காப்பாளர்- ரூ.2 கோடி, உமேஷ் யாதவ் - பந்து வீச்சாளர்- ரூ.1 கோடி, ரிபல் படேல் - சகலதுறை வீரர - ரூ.20 இலட்சம், விஷ்ணு வினோத் - விக்கெட் காப்பாளர் - ரூ.20 இலட்சம், லுக்மன் ஹூசைன் மேரிவாலா - பந்துவீச்சாளர் - ரூ.20 இலட்சம், எம். சித்தார்த் - பந்து வீச்சாளர் - ரூ.20 இலட்சம்

கையிருப்பு: ரூ.2.15 கோடி

### கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

ஷகிப் அல் ஹசன் - சகலதுறை வீரர் - ரூ.3.20 கோடி, ஹர்பஜன் சிங் - பந்து வீச்சாளர்- ரூ.2 கோடி, பென் கட்டிங் - சகலதுறை வீரர் - ரூ.75 இலட்சம், கருண் நாயர் - துடுப்பாட்ட வீரர் - ரூ.50 இலட்சம், பவன் நெகி - சகலதுறை வீரர் - ரூ.50 இலட்சம், வெங்கடேஷ் ஐயர் - சகலதுறை வீரர் - ரூ.20 இலட்சம், ஷல்டன் ஜேக்சன் - விக்கெட் காப்பாளர்- ரூ.20 இலட்சம், வைபவ் அரோரா - பந்துவீச்சாளர்- ரூ.20 இலட்சம்

கையிருப்பு: ரூ.3.20 கோடி

### மும்பை இந்தியன்ஸ்

நதன் கோல்டர் நீல் - பந்துவீச்சாளர் - ரூ.5 கோடி, அடம் மில்னே - பந்து வீச்சாளர் - ரூ.3.20 கோடி, பியூஷ் சாவ்லா - பந்துவீச்சாளர்- ரூ.2.40 கோடி, ஜேம்ஸ் நீஷம் - சகலதுறை வீரர் - ரூ.50 இலட்சம், யுத்வீர் சாரக் - சகலதுறை வீரர் - ரூ.20 இலட்சம், மார்கோ ஜேன்சன் - சகலதுறை வீரர் - ரூ.20 இலட்சம், அர்ஜுன் டெண்டுல்கர் - ரூ.20 இலட்சம்

கையிருப்பு: ரூ.3.65 கோடி

### பஞ்சாப் கிங்ஸ்

ஜை ரிச்சர்ட்சன் - பந்துவீச்சாளர் - ரூ.14 கோடி, ரிலே மெரிடித் - பந்து வீச்சாளர் - ரூ.8 கோடி, ஷாருக் கான் - சகலதுறை வீரர் - ரூ.5.25 கோடி, மொய்சஸ் ஹென்ரிக்ஸ் - சகலதுறை வீரர் ரூ.4.20 கோடி, டேவிட் மலன் - சகலதுறை வீரர்- ரூ.1.50 கோடி, பாபியொன் அலன் - சகலதுறை வீரர் - ரூ.75 இலட்சம், ஜலஜ் சக்ஸேனா - சகலதுறை வீரர் - ரூ.30 இலட்சம், சௌரவ் குமார் - சகலதுறை வீரர் - ரூ.20 இலட்சம், உத்காத் சிங் - சகலதுறை வீரர் - ரூ.20 லட்சம்

கையிருப்பு: ரூ.18.80 கோடி

### ஹைதராபாத் சன்ரைசர்ஸ்

கேதார் ஜாதவ் - சகலதுறை வீரர் - ரூ.2 கோடி, முஜீப் ஸர்தான் - பந்துவீச்சாளர் - ரூ.1.50 கோடி, ஜெ.சுசித் - பந்துவீச்சாளர் - ரூ.30 இலட்சம்

கையிருப்பு: ரூ.6.95 கோடி

### ராஜஸ்தான் றோயல்ஸ்

கிறிஸ்தோபர் மொரிஸ் - சகலதுறை வீரர் - ரூ.16.25 கோடி, ஷிவம் துபே - சகலதுறை வீரர் - ரூ.4.40 கோடி, சேத்தன் சகாரியா - பந்துவீச்சாளர் - ரூ.1.20 கோடி, முஸ்டா பிஸூர் ரஹ்மான் - பந்துவீச்சாளர் - ரூ.1 கோடி, லியாம் லிவிங்ஸ்டன் - சகலதுறை வீரர் - ரூ.75 இலட்சம், கே.சி.கரியப்பா - பந்து வீச்சாளர்- ரூ.20 இலட்சம், ஆகாஷ் சிங்- பந்துவீச்சாளர்- ரூ.20 இலட்சம், குல்தீப் யாதவ் - பந்துவீச்சாளர்- ரூ.20 இலட்சம்

கையிருப்பு: ரூ.13.65 கோடி

### பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

கைல் ஜமீசன் - சகலதுறை வீரர் - ரூ.15 கோடி, கிளென் மக்ஸ்வெல் - சகலதுறை வீரர் - ரூ.14.25 கோடி, டேன் கிறிஸ்டியன் - சகலதுறை வீரர் - ரூ.4.80 கோடி, சச்சின் பேபி - துடுப்பாட்டவீரர் - ரூ. 20 இலட்சம், ரஜத் பட்டிதார் - துடுப்பாட்ட வீரர் - ரூ.20 இலட்சம், முகமது அஸாருதீன் - விக்கெட் காப்பாளர் - ரூ.20 இலட்சம், சுயாஷ் பிரபுதேசாய் - சகலதுறை வீரர் - ரூ.20 இலட்சம், கோனா ஸ்ரீதர் பரத் - விக்கெட் காப்பாளர் - ரூ.20 இலட்சம்

கையிருப்பு: ரூ.35 லட்சம் (ஐ)

*அவுஸ்திரேலிய ஓப்பன்:*

# இறுதியில் ஜோகோவிச்



மெல்பர்ன், பெப். 20

ரஷ்ய வீரரான அஸ்லான் கரட்சேவை வீழ்த்தி அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்துக்கு முன்னேறினார் நோவாக் ஜோகோவிச்.

அரையிறுதியின் மூன்று செற்களையும் 6-3, 6-4, 6-2 என்ற கணக்கில் வெற்றி கொண்டதன் மூலமே செர்பிய வீரர் ஜோகோவிச் தனது வெற்றியை உறுதி செய்துகொண்டார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் டெனில் மெட்வெடேவ் அல்லது ஸ்டீபனோஸ் ஆகியோரில் ஒருவரை ஜோகோவிச் சந்திக்கவுள்ளார்.

இதில் வெற்றி பெற்றால் ஏற்கனவே தன்வசமுள்ள சாதனையை முறியடித்து 9 ஆவது முறையாகவும் இந்த தொடரை வெற்றி கொண்ட பெருமையைப் பெறுவார். (ஐ)




# ஐ.பி.எல்லில் இலங்கை வீரர்கள் ஏன் அதிகம் வாங்கப்படவில்லை?

சென்னை, பெப். 20

சென்னையில் நடந்த முடிந்த 14வது ஐ.பி.எல். ஏலத்தில் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் அதிகமான பிரதிநிதித்துவம் இல்லை என்பது வியப்பாக இருக்கிறது.

ஐ.பி.எல். மட்டுமல்ல உலகின் பல்வேறு நாடுகளின் இருபது -20 போட்டிகள் என்றாலே, மே.இ.தீவுகள் வீரர்களின் பங்களிப்பு இல்லாமல் இருக்காது. தங்கள் சொந்த நாட்டு அணிக்கு உயிரைக் கொடுத்து விளையாடுவதைவிட, இது போன்ற லீக் போட்டிகளில் அணிகளுக்குத்தான் அதிகமான ஈடுபாடுகாட்டுவதால், மே.இ.தீவுகள் வீரர்களை ஆர்வத்துடன் பல அணிகளும் வாங்குவார்கள்.

ஆனால், கடந்த ஆண்டு ஐ.பி.எல். வரை மே.இ.தீவுகள் வீரர்கள் ஆதிக்கம் நிறைந்து காணப்பட்ட ஐ.பி.எல். ஏலம் இந்த ஆண்டு மே.இ.தீவுகள் வீரர்கள் மட்டுமல்லாமல் இலங்கை வீரர்களின் பங்களிப்பும் இல்லாமல் போனது.

நியூஸிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் ஆகிய வெளிநாட்டு வீரர்கள் வாங்கப்பட்டனர். ஐ.பி.எல். அணிகளில் ஏற்கனவே கெயில், அன்ட்ரூ ரஸல், சுனில் நரேன், கிரன் பொலார்ட், ஹோல்டர், பிராவோ உள்பட பல வீரர்கள் இருந்தபோதிலும் புதிதாக ஏலத்தில் மே.இ.தீவுகள் சார்பில் அலன் மட்டுமே வாங்கப்பட்டார். அதே சமயம், ஷெல்டன் கொட்ரெல், ஓஸ்னே தோமஸ், லீவிஸ், ரோவ்மன் பாவெல் ஆகியோர் இருந்தும் வாங்கப்படவில்லை.

இலங்கை அணி சார்பில் ஒரு வீரர் கூட ஏலத்தில் எடுக்கப்படவில்லை என்பது பெரும் வியப்புக்குரியதுதான்.

இந்த ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தில் பெரும்பாலும் சகலதுறை வீரர்கள், வேகப்பந்துவீச்சாளர்கள் ஆகியோருக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த இருதுறைகளிலும் சிறந்த வீரர்கள் என மே.இ.தீவுகள் அணியிலும், இலங்கையிலும் மிகக் குறைவு. இதனால்தான். மே.இ.தீவுகளில் இருந்து ஒருவரும், இலங்கையில் இருந்து எந்த வீரரும் ஏலத்தில் எடுக்கப்படவில்லை.

(ஐ)

# பந்து வீச்சு பயிற்சியாளராக சமிந்த வாஸ் நியமனம்!

கொழும்பு, பெப். 20

மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப் பயணத்திற்கான இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சு பயிற்சியாளராக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

தனிப்பட்ட காரணங்களைக் கூறி வேகப் பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய டேவிட் சாகருக்கு பதிலாக இலங்கை அணியின் முன்னாள் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் சமிந்த வாஸை பெயரிடுவது குறித்து உயர் அதிகாரிகள் விவாதித்து வந்தனர்.

டேவிட் சாகர் வியாழக்கிழமை (பெப்ரவரி 18) உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியை இராஜினாமா செய்தார்.

2019 டிசம்பரில் இலங்கையின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக பெயரிடப்பட்ட சாகர், பதவியில் இருந்து விலகுவதற்கான தனது முடிவுக்கான தனிப்பட்ட காரணங்களை மேற்கோள் காட்டினார்.

54 வயதான அவர் முன்னர் பல அணிகளுடன் வெவ்வேறு பயிற்றுவிப்பாளர்கள் பணியாற்றியுள்ளார்.

(ஐ)

# முகாமையாளரைத் தாக்கிய எண்மர் விளக்கமறியலில்

நுவரெலியா,பெப்.20

நுவரெலியா, மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட ஒல்டன் தோட்ட முகாமையாளரைத் தாக்கி, சானம் கரைத்து ஊற்றிய குற்றச்சாட்டில் கைதான ஏழு பெண்கள் உட்பட எட்டுப்பேரையும் எதிர்வரும் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஒல்டன் தோட்ட முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளரை இடமாற்றம் செய்யுமாறு கோரி, ஒல்டன் மேற்பிரிவு கீழ்பிரிவு, கிங்கோரா, நிலாவத்தை பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதுடன் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான 1,000 ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கடந்த 5ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில், ஒல்டன் தோட்டத் தேயிலை தொழிற்சாலையிலிருந்து பொதி செய்யப்பட்ட தேயிலை தூள் களை தோட்ட நிர்வாகம், கடந்த 3ஆம் திகதி எடுத்துச்செல்ல முற்பட்டபோது, அதனை வெளியேற்றவிடாது தொழிலாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது, தோட்ட முகாமையாளர் பெண் தொழிலாளி ஒருவரைத் தாக்கிய நிலையில் அந்தப் பெண், மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் தோட்ட முகாமையாளரையும், உதவி முகாமையாளரையும் இடமாற்றம் செய்யக் கோரி, கடந்த 3ஆம் திகதி முதல் தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தோட்ட நிர்வாகமானது, 16 ஆம் திகதி வெளியாரை அழைத்துவந்து கொழுந்து பறிக்கச் செய்ய முற்பட்டபோது, தொழிலாளர்கள் வெளியாரை விரட்டியடித்ததுடன், தோட்ட முகாமையாளரின் விடுதிக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தோட்ட முகாமையாளரும், உதவி முகாமையாளரும் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர் எனக் கூறி, மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், முகாமையாளர்கள் இருவரும் கிளங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

முகாமையாளர்களின் முறைப்பாட்டுக்கமைய ஒரு ஆண் தொழிலாளியும், 7 பெண் தொழிலாளர்களையும் மஸ்கெலியா பொலிஸார் கைது செய்ததுடன் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது இந்த எட்டுப் பேரையும் எதிர்வரும் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# பெண்களுக்கு எதிராக முறைகேடுகள் விசாரணை செய்ய பாராளுமன்ற குழு

## சபாநாயகரிடம் அனுமதி கோர பெண் எம்.பிக்கள் ஒன்றியம் தீர்மானம்

கொழும்பு,பெப்.20

**நாட்டில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் அநியாயங்கள் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்ய பாராளுமன்ற குழுவொன்றை அமைக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத் தலைவி, ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**



சபாநாயகரின் அனுமதியுடன் சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக எதிர்வரும் மார்ச் 09 ஆம் திகதி இந்த பாராளுமன்றக் குழுவை அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இவ்வாறு குறிப்பிட்டார்.

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் பல்வேறு வன்முறைகள், பாகுபாடுகள் மற்றும் ஏதாவதொரு பதவியில் தமது திறமை, தகுதி மற்றும் இயலுமைக்கு அமைய பதவி உயர்வு பெறும் போது, பெண் என்ற காரணத்தால் இடம்பெறும் முறைகேடுகளை விசாரணை செய்யக்கூடிய முழு அதிகாரம் கொண்ட பாராளுமன்ற குழு அவசியமாகும்.

பெண்களுக்கு உரிய இடம், சமநிலை, தாய்க்கு முதலிடம் போன்ற வசனங்கள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டாலும், சமூகத்தில் பல்வேறு துறைகளில் பெண்களுக்குப் பாகுபாடுகள் காண்பிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இந்தப் பாராளுமன்றக் குழு மூலம் பெண்களின் திறமை, இயலுமை மற்றும் தகுதி அடிப்படையில் முன்னேறிச் செல்ல உள்ள தடைகளைத் தவிர்க்க முடியும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹினி விஜேரத்ன, கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாள்கள் தொகுதியின் பிரதானியுமான குஷானி ரோஹணதீர ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# பேரணியில் பங்கேற்ற செல்வம் எம்.பியிடம் வாக்குமூலம்

மன்னார்,பெப்.20

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரணியில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

மன்னாரிலுள்ள அவரது அலுவலகத்துக்கு நேற்றுக் காலை சென்ற பொலிஸார் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் அவரது அலுவலகத்துக்குச் சென்ற மாங்குளம் பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினரிடம் வாக்கு மூலத்தை பதிவு செய்து கொண்டனர்.



அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில், வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து சென்ற பொலிஸாரும், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பில் வாக்குமூலத்தை பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலத்தை பெற்றுக் கொள்ள வருகை தருமாறும், பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் உட்பட பலரிடம் பொலிஸார் வாக்குமூலத்தை பதிவு செய்து வருகின்றனர். (எ)

# அனுமதியின்றி இடம்பெற்ற சமுர்த்தி கூட்டம் இடை நிறுத்தம்

பொகவந்தலாவ,பெப்.20

பொகவந்தலாவ பொதுச் சுகாதாரப் பிரிவில் மேலும் 09 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நேற்றுக்காலை அனுமதியின்றி இடம்பெற்ற சமுர்த்திக் கூட்டம் நிறுத்தப்பட்டு, கூட்டத்துக்குச் சென்றவர்கள் பொதுச்சுகாதாரப் பிரிவினரால் வெளியேற்றப்பட்டனர்.

நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ள நிலையில், பொதுக் கூட்டங்கள் நடத்தத் தடை செய்யப்பட்டுள்ள போதிலும், பொகவந்தலாவ ஆரியபுர பகுதியில் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் அதிகாரியால் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு பொகவந்தலாவ பொதுச்சுகாதார அதிகாரியிடம் அனுமதி பெறாததால், கூட்டம் இடம்பெற்ற மண்டபத்துக்குச் சென்ற பொதுச் சுகாதார அதிகாரி, சமுர்த்தி உத்தியோகத்தரை எச்சரித்ததுடன், மக்களை அங்கிருந்து வெளியேற்றினார்.

பொகவந்தலாவ பொதுச் சுகாதார பிரிவில் இதுவரை 115 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)







# பசளை தயாரிப்பு நிலையத்தில் தீப்பரவல் நீண்டநேர போராட்டத்துக்குப்பின் கட்டுக்குள்

வத்தளை,பெப்.20

வத்தளை - கெரவலப்பிட்டிய பசளை தயாரிக்கும் நிலையத்தில் கழிவுப் பொருள்களைச் சேகரித்து வைத்திருக்கும் பகுதியில் திடீரென பரவிய தீகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெரவலப்பிட்டிய பகுதியிலேயே இவ்வாறு திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

கழிவுப்பொருள் முகாமைத்துவத் தொகுதியின் 4 ஏக்கர் பரப்பில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் சேகரிக்கும் பகுதியில் தீ பரவியுள்ளது.

விமானப்படையினர், ஹெலிகெப்டர் மூலம் நீரை விசிறி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் காற்றுடனான வானிலையால் தீ பரவும் வேகம் அதிகரித்த போதும், கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் பொலிஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

தீப்பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்த வத்தளை பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# இலங்கை விடயத்தில் சர்வதேச சமூகம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர்கள் கோரிக்கை

கொழும்பு, பெப்.20

**இலங்கையில் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம், நீதி மற்றும் பொறுப்புக் கூறல் ஆகிய விவகாரங்களில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் சுயா தீன நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் முன்னாள் ஆணையாளர்கள், கொலம்பியாவின் முன்னாள் ஜனாதிபதி யுவன் மனுவல் சன்டோஸ், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பிரதிச் செயலாளர் ஜான் எலியசன் உட்பட 20 முன்னாள் நிபுணர்களும், சுயாதீன நிபுணர்களும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அண்மையில் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் நாடு முன்னேற்றத்தை காணவில்லை என்பதை, அடிக்கோடிட்டுக்காட்டியுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், 'நிலையான நல்லிணக்கம் மற்றும் மீண்டும் மனித உரிமைகள் மீறல், மோதல்கள் இடம்பெறுதலை தடுப்பதற்கான முக்கியமான விடயமாக, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் அநீதிகளுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான உறுதியான சர்வதேச நடவடிக்கைகளைப் பரிந்துரைத்துள்ளது.

ஆகவே, உறுப்பு நாடுகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து செயல்பட்டு, சர்வதேச நியாயாதிக்கத்தின் மூலம் நீதிக்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மனித உரிமை ஆணையாளர்கள் விடுத்த வேண்டுகோளையே நாங்களும் எதிரொலிக்கின்றோம்.

இலங்கை தண்டனையின் பிடியிலிருந்து, விலக்களிப்பதை நிறுத்த மறுப்பதால் சர்வதேச வழிமுறைகள் மூலம் பொறுப்புக்கூறலிற்கான வழிவகைகள் தொடர்பில் ஆராயவேண்டும்.

இதேவேளை சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதிக்க வேண்டும் என்ற மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை நாங்கள் ஆதரிக்கின்றோம்" ஐ.நா. முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் சுயாதீன நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ)

## பாரவூர்திகள் மோதி விபத்து சாரதி காயம்

கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அண்மையில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மற்றுமொரு பாரவூர்தி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான பாரவூர்தி கடுமையாகச் சேதமடைந்ததுடன், சாரதி சிறுகாயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## வல்லப்பட்டையுடன் இளைஞன் கைது

வவுனியா - ஓமந்தையில் வல்லப்பட்டையுடன் 25 வயது இளைஞன் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியா சென்ற தனியார் பேருந்தில், வவுனியா - புளியங்குளம் விஷேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, இந்த இளைஞன் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞன் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த இளைஞனிடமிருந்து 700 கிராம் வல்லப்பட்டை மீட்கப்பட்டது எனத் தெரிவித்த, ஓமந்தை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள்!



கொழும்பு, பெப். 20

பாகிஸ்தான் பிரதமரின் விஜய ஏற்பாடுகளுக்காக பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு 2 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாகிஸ்தான் பிரதமரை வரவேற்பதற்காக விசேட இராணுவ மரியதை அணிவகுப்பு நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான ஒத்திகை நிகழ்வு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்றது. சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று அங்கு சென்று ஒத்திகை நிகழ்வைப் பார்வையிட்டார்.

பாகிஸ்தான் பிரதமரின் விஜய செயற்பாடுகளுக்காக இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பாதுகாப்பு மற்றும் அரச அதிகாரிகளுடன் அமைச்சர் நேற்று கலந்துரையாடினார்.

## மே மாத இறுதிக்குள் சகலருக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கப்படும்

### புத்திக விக்கிரமாதார



கொழும்பு,பெப்.20

எதிர்வரும் மே மாத இறுதிக்குள் அனைத்து மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கி முடிக்க எதிர்பார்க்கின்றோம். அதனிடையே சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்க எதிர்பார்க்கின்றோம். முதற்கட்டமாக 5 இலட்சம் தடுப்பூசி வழங்கப்பட்டு வருவதோடு ரஷ்யா, சீனா தடுப்பூசிகளும் எமக்கு கிடைக்கவுள்ளன என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் முன்னணித் தலைவர் புத்திக விக்கிரமாதார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் நேற்று பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏட்ஜ் விடுதி வளாகத்தில் நடந்த ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் மே மாத இறுதிக்குள் அனைத்து மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கி முடிக்க எதிர்பார்க்கின்றோம். அதனிடையே சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்க எதிர்பார்க்கின்றோம். இதுவரை 5 இலட்சம் தடுப்பூசி வழங்கப்பட்டு வருவதோடு ரஷ்யா, சீனா தடுப்பூசிகளும் எமக்கு கிடைக்கவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற கருத்தினால் நகைப்படைகிறோம். மக்கள் பிரதிநி என்கிற பொறுப்பினை அவர்கள் மறந்துவிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி இன்று புறந்தள்ளப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்திக்கும் அதே நிலைமையே ஏற்படும்.

முதலீடு பற்றி பேசுகையில், நாட்டை அபிவிருத்தி செய்ய முதலீடுகள் அவசியம். முழு உலகமும் வீழ்ச்சிகண்ட நேரத்தில் எமது நாடு சுகாதாரம்,பொருளாதாரத்தில் தேர்ச்சி பெற்றுவருகின்றது. இந்நிலையில் போலிக் கருத்துக்களை பிரச்சாரப்படுத்த எதிரணி முயற்சிக்கின்றது. 2015ஆம் ஆண்டில் நாட்டு மக்களிடையே அரசாங்கம் மீது சந்தேகத்தை விதைத்தார்கள். அதன் விளைவாக 5 வருடங்கள் நாடு பின்நோக்கிச் சென்றது.

அரசியல் பழிவாங்கல் குறித்த ஆணைக்குழு பற்றி இன்று பேசப்படுகின்றது. கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் மற்றும் அநீதிகள் குறித்து விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதன் நீதிமன்ற வியாக்கியானம் விரைவில் வெளிவரவுள்ளது. அரசியல் செய்யப்போய் இன்றும் சிறைகளில் பலர் உள்ளனர். நீதிமன்றத்தை நாங்கள் குறைசொல்ல மாட்டோம். நீதிமன்ற விடயங்களில் போலித் தகவல்களை வழங்கிதால் பிழையான தீர்மானமே ஏற்படும். ஆகவே துமிந்த சில்வா, ஜோன்ஸ்டன் உள்ளிட்டவர்களுக்கும் இவ்வாறே ஏற்பட்டது. ஆகவே சரியான தகவல்களை வழங்கி இந்த அநீதிகளை நீதியாக மாற்ற எதிர்பார்க்கின்றோம்- என்றார். (எ)

## சாணக்கியனிடம் 8 பொலிஸ் நிலைய பொலிஸார் நேற்று வாக்குமூலம் பதிவு



மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் நேற்று வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியை முன்னெடுத்தமை தொடர்பில் பொலிஸ் நிலையங்கள் மூலம் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்த வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்துக்கு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

வடக்கில் வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்தும் கிழக்கில் வாழைச்சேனை, மூதூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின்போது நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டதா?, பொதுமக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதா?, கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் உள்ள நிலையில் அதுதொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதா? போன்ற பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டு வாக்குமூலங்கள் புதிவுசெய்யப்பட்டன.

நேற்று முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணிவரையில் இவ்வாறு வாக்குமூலங்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையானது இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லையென்பதை உறுதிப்படுத்தும் செயல்பாடாகவுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப்பிட்டார். (எ)

ஈழநாடு
Eelanadu

# கண்டி மாவட்டத்தில் புதிய தமிழ்க் கட்சி!

## முக்கிய புள்ளிகள் இணைவு

கொழும்பு, பெப். 20

**கண்டி மாவட்டத்தை மையப்படுத்தி விரைவில் புதியதொரு அரசியல் கட்சி உதயமாகவுள்ளது எனவும், இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரே இதன் பின்னணியில் செயற்படுவதாகவும், முக்கியமான சிவில் அமைப்புகள் இக்கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது.

கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிட்ட சில வேட்பாளர்களும் இக்கட்சியில் இணைந்து பயணிக்க தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கண்டி மாவட்டத்தை பிரதான தளமாக இயங்குவதற்கு திட்டமிட்டுள்ள அக்கட்சி, மாத்தளையிலும் தமது அரசியல் பணிகளை முன்னெடுக்கும் என முக்கிய பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

## சிறுமியுடன் குடித்தனம் இளைஞர் மறியலில்!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணத்தில் சிறுமியை கடத்திச் சென்று இரண்டு மாதங்கள் குடும்பம் நடத்திய இளைஞனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் வசித்து வந்த 17 வயது சிறுமியை அராலிப் பகுதியை சேர்ந்த இளைஞன் கடத்தி சென்றார் என சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் இரண்டு மாதங்களாக விசாரணைகளை முன்னெடுத்து வந்த கொடிகாமம் பொலிஸார் இளைஞனையும் சிறுமியையும் கைது செய்திருந்தனர்.

## திருமலை எண்ணெய் குதம் தொடர்ந்து இந்தியா வசமே

### ஏற்கனவே வெளிவந்த செய்திகளில் உண்மை இல்லை என்கிறது தூதரகம்

கொழும்பு, பெப். 20

திருகோணமலை எண்ணெய்க் களஞ்சிய தொகுதியை கூட்டாக அபிவிருத்தி செய்து இயக்குவது தொடர்பான இந்திய - இலங்கை இடையிலான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதாக செய்திகளில் உண்மையில் இல்லை என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குறித்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளதாகவும், இதில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் தூதரகம் அறிவித்துள்ளது.

2021 பெப்ரவரி 17ஆம் திகதியன்று நடைபெற்ற நிகழ்வொன்றில், இலங்கை மின்சக்தி அமைச்சர், நிகழ்த்திய உரையை, இந்த அறிக்கைகள் சரியாக பிரதிபலிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை மின்சக்தி அமைச்சர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சரின் ஊடக சந்திப்பில் கூறப்பட்டது போலவே, 2017இன் புரிந்துணர்வு உடன்படிக்கை உட்பட ஏற்கனவே அமுலில் இருக்கும் இருதரப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம் குறித்த எண்ணெய் களஞ்சிய தொகுதியை கூட்டாக அபிவிருத்தி செய்து இயக்குவதற்கு பரஸ்பரம் ஏற்புடையதான முறைமைகள் குறித்து இரு அரசாங்கங்களும் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இந்திய தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்க்காட்டியுள்ளது.

அத்துடன், இந்த விடயம் குறித்து உத்தியோக பூர்வமான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் அதன் பெறுபேறுகளை பரஸ்பர நலன்களின் அடிப்படையில் துரிதமாக அமுல்படுத்துவதற்கும் இந்தியா ஆவலுடன் உள்ளது என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி விபத்தில் சாரதி காயம்



கிளிநொச்சி நகரில் வைத்தியசாலைக்கு அண்மையில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் சாரதி காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல் ஏற்றிச் சென்ற பார ஊர்தியின் சாரதி ஓய்வெடுப்பதற்காக வீதியின் ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளார். அதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கு நோக்கிப் பயணித்த மற்றுமொரு பார ஊர்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் பார ஊர்தி மிகவும் சேதமாகியதுடன், தெய்வாதீனமாக சாரதி சாதாரண காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனா தடுப்பூசியைப் பெறாத எம்.பிக்களுக்கு மீண்டும் வாய்ப்பு!

இதுவரை ஒக்ஸ்பர்ட் எஸ்ட்ரா செனகா கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக எதிர்வரும் வாரத்தில் மேலும் 3 நாட்கள் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இலங்கை தேசிய கொவிட் செயலணியால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்தார்.

அதன்படி, பெப்ரவரி 23 தொடக்கம் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொழும்பு நாரஹேன்பிடியில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறித்த தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் வாரத்தில் கொழும்பிற்கு வருகை தந்து பாராளுமன்ற கூட்டத்தொடர்களில் கலந்துக் கொள்ளவுள்ள நிலையில் அவர்களுக்கு இத்தினங்களில் கொவிட் தடுப்பூசியை ஏற்றத் தீர்மானிக்கப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 17423 \| வே \| 1970<br>Divorced \| வேலணை \| இந்து<br>Business \| Germany \| செவ் :04<br>அவிட்டம்(மகரம்) \| 170செ.மீ | 17573 \| ப \| 1982<br>சுன்னாக நகரம் \| இந்து \| செவ் : 12<br>N/A \| Sri lanka \| கி.பா : 5.75<br>கேட்டை(விருச்சிகம்) \| 172செ.மீ |
| 17447 \| வே \| 1972<br>Divorced \| யாழ்நகரம் \| இந்து<br>Sri Lanka \| ஆய்யிலியம்(கடகம்)<br>Proprietor \| 168செ.மீ \| சு.செவ் | 17417 \| ஆ \| 1986<br>கொட்டகல \| இந்து \| சைவம்<br>Sri Lanka \| Lecturer<br>ரேவதி(மீனம்) \| 153செ.மீ |
| 17579 \| வே \| 1978<br>யாழ்நகரம் \| இந்து \|<br>Building Contracts \| Australia<br>கேட்டை(விருச்சிகம்) \| 167செ.மீ | 17432 \| ப \| 1987<br>யாழ்நகரம் \| இந்து \| Sri Lanka<br>உத்தரம்(கன்னி) \| 157செ.மீ<br>Technical Officer |
| 17633 \| வே \| 1980<br>ஓமந்தை \| இந்து<br>Business \| India \| 160செ.மீ<br>விசாகம்(விருச்சிகம்) | 17408 \| கோ \| 1990<br>மாதகல் \| இந்து \| 162செ.மீ<br>Development Officer \| செவ்-04<br>Sri Lanka \| கேட்டை(விருச்சிகம்) |
| 17444 \| வே \| 1980<br>மண்டைதீவு \| இந்து<br>Staff \| Swizerland \| பூரம்(சிம்மம்)<br>178செ.மீ | 17480 \| கு \| 1990<br>Divorced \| வண்ணார்ப்பண்ணை<br>கிறிஸ்தவம் \| Manager \| 172செ.மீ<br>Sri Lanka \| ரேவதி(மீனம்) \| லக்.செவ் |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

## பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகள் ஜனநாயக இடைவெளியை அதிகமாக்கும்!

யாழ்ப்பாணம், பெப். 20

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் விசாரணை செய்யும் நடவடிக்கைளுக்கு பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த இயக்கம் மேலும் தெரிவிக்கையில்-

பொத்திவில் தொடங்கி பொலிகண்டி வரை மக்கள் எழுச்சி போராட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களை பொலிஸார் பல்வேறு காரணங்களை கூறி விசாரணைக்கு அழைக்கிறார்கள். அதனால் பல அசௌகரியங்களுக்கு மக்கள் உள்ளாகிறார்கள்.

பொதுமக்கள், மதகுருக்கள், கட்சி பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என அனைவருக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விசாரணைக்கு அழைக்கிறார்கள். இச்செயற்பாடுகள் இந்த நாட்டில் ஜனநாயக இடைவெளியை மேலும் அதிகமாக்கும்.

இந்த பேரணி வன்முறைகள் எதுவும் இன்றி மிக ஒழுக்கமாக அகிம்சை ரீதியில் இடம்பெற்றது. எனவே நாட்டின் குடிமக்களாக நாமும் சுதந்திரமாக வாழ இந்த நாட்டில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் வழிசெய்ய வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

விசேட விலையில் மடிக்கணனி



Laptop
14GB Ram
1 TB HDD
Windows 10
HP i3
Free Bag
கையிருப்பு உள்ளவரை
St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர்
திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK




11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-ஜெனிவா
மனிதவுரிமை அரங்கை தமிழ்த் தலைமைகள்
தனித்தனி அணிகளாக கையாளுவது



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்-இசைக்குழுக்களுக்கு இடையிலான போட்டி நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைடம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி
கருமாரி அம்மன் ஆலய திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை
அன்னமகேஸ்வரர் ஆலய திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி
கருமாரி அம்மன் ஆலய திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம்
(மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.